# பெண்

தொகுதி: 17 இலக்கம் : 01



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

# பெண்

தொகுதி : 17 இலக்கம் : 01

2012

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை
இல. 55, லேடி மன்னிங் டிறைவ்
மட்டக்களப்பு

**தொலைபேசி இல.:** 065-2223297

Fax No. 065-2224657 e-mail : suriyaw@slt.lk

**THE WOMAN** - A journal Published by
Suriya women's Development centre,
No.55, Lady Manning Drive
Batticaloa, Sri Lanka.

| | | |
|---|---|---|
| ஆசிரியை | :- | "விஜயலட்சுமி சேகர்" |
| பின் அட்டை புகைப்படம் | :- | "பெண்களது கதைகளின் ஆவணம்" நிகழ்வில் இருந்து |
| அட்டை வடிவமைப்பு, கணினி வடிவமைப்பு | :- | சுபாஜெனி சங்கர் |
| அச்சகம் | :- | வணசிங்கா அச்சகம், 126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே. 065 2227170 |
| விலை | :- | 100/= |

## உங்களுடன் ....

'பெண்களின் எழுத்துக்கள் புலம்பல்கள்' எனப் புலம்புவோரின் குரல்கள் காதுகளில் விழுந்தவேளைகள் உண்டு. 'பெண்கள் கற்பனைகளில் வாழ்கிறார்கள்' இப்படியும் விழுந்ததுண்டு.

பெண்களின் வாழ்வை புலம்பலாக்கும் காரணிகள் அவர்கள் வாழும் காலத்தில் அவர்களைப் பீடித்து வருவதை நாம் காண்கிறோம். பீடைகளைப் பிடுங்கி எறிகையில் எழும் ரணங்களின் ஓசைகளின் பதிவுகள் பதிப்பிக்கப்பட வேண்டியது உரிய காலங்களின் கட்டாயக் கடமை. அதுவே அடுத்த சந்ததியின் மீட்சிக்கான பாடம்.

பெண்கள் மௌனித்திருக்கப்பட வேண்டியவர்கள் இதுவே சரித்திரங்கள் காலம் காலமாக எதிர்பார்த்திருப்பது. எனினும் பெண்களின் மௌனங்கள் உடைபடும் வேளை நிச்சயம் அதிர்வுகள் நிகழ்ந்தே தீரும்.

அதிர்வுகளின் விளைவுகள் முதலில் விமர்சனங்கள். பெண்களின் கருத்துக்கள் முன் வைக்கப்படும் வேளையில் காதுகளை பொத்தி வாயைத் திறந்து கண்ணில்லாதவன் கொக்கு பார்த்த கதையாய் இவை வளரும்..

நீ கூறும் பெண்ணின் புலம்பல்களை
பரிசோதித்துப் பார் – அதற்குள்
உன் வாழ்விருப்பதைக் காண்பாய்
அதனை – மூர்ச்சித்துப்பார்
அதற்குள் உன் சுவாசத்தை முகர்வாய்
தொட்டுப் பார் – அது
உனக்கும் சுகந்தரும் மருந்தாவதாய் உணர்வாய்
நின்று நிதானித்து,
நேரமிருந்தால்
வாசித்துப் பார் – அதனை
சத்திய சோதனையின் மறுபிரதி என்பாய்

இப்படி எந்தக் கவிஞனும் கூறும் வரிகளுக்காய் காத்து நிற்கப்போவதில்லை பெண்கள். அவர்கள் இயல்பு இயங்கிக் கொண்டே இருப்பது.... பல்வேறு தளங்களில், பல்வேற வடிவங்களில்.

ஆசிரியை

# உள்ளே ....


| | |
|---|---|
| ✚ விட்டுவிடுதலையாகி | 01 |
| ✚ சிதைவு | 04 |
| ✚ புதைந்தவை | 04 |
| ✚ இறக்கைகள் | 05 |
| ✚ தாளங்குடாவில் இருந்துவதனி | 06 |
| ✚ இது இவர்களின் கதை | 09 |
| ✚ விடைதேடி | 15 |
| ✚ மட்டக்களப்பின் சில சுவாரசியங்கள் | 15 |
| ✚ சமாதானகோலத்தின் இன்றையகோலம் | 18 |
| ✚ உரிமைக்காய் | 19 |
| ✚ எனதுகனவு எனது இலட்சியம் | 21 |
| ✚ மனித வாந்திகள் | 25 |
| ✚ காணிநிலம் வேண்டும் | 27 |
| ✚ பொலிஸ் மகளிர்.சிறுவர் பிரிவின் நடைமுறைகள் | 29 |
| ✚ சோர்தலின் இடையில் ஓர் ஆன்மக் குரல் | 33 |
| ✚ முகத்தில் எரியும்........ | 34 |
| ✚ பெட்டகத்தின் கதை | 40 |
| ✚ கடிதங்கள் | 41 |



# விட்டு விடுதலை

கமலினி சிவநாதன்

மேற்கு வானத்து மேகங்கள் சூரியனை மூடி மறைத்துக்கொண்டிருந்தன. சில வண்டுகள் இரவின் வரவைக் கூறி வீரிட்டுக் கொண்டிருந்தன. எங்கோ தூரத்தில் ஊளையிடும் நரிகளின் குரல் குன்றுகளில் மோதி எதிரொலித்துக் கொண்டிருந்தன. ஆந்தை கள் மரக்கிளைகளில் தங்கியிருந்து ஏதோ ஒரு உயிரின் மரணத்தை அறிவித்துக் கொண்டிருந்தது. அந்த வனாந்தரத்தில் இலை தழைகளால் கட்டப்பட்டிருந்த குடிசைக்குள்ளே இராமன் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுக்கு எதிரே ஒரு மூலையில் உறக்கம் மறந்த விழிகளோடு சாந்தமே உருவாக அமர்ந்திருந்தாள் சீதை. அவளுடைய அகன்ற கருவிழிகள் களையிழந்து காணப்பட்டன. ஏக்கமும் ஏமாற்றமும் அந்த விழிகளில் செவ்வரியாகப் படர்ந்திருந்தன. ஏகாந்த இரவில் எதுவும் இயலாதவளாக கானகத்தின் குரலைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் சீதை அல்ல சிலை என்று கூறத்தக்கவள்.

இராமன் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான். சீதையின் நிலைமைபற்றி அவன் சிறிதும் கவலைகொள்ளவில்லை. அவளைத் தேற்ற வேண்டிய தேவையும் அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. சீதை ஜனகனின் மகளாக, வைதேகியாகப் பிறந்திராவிட்டால் இந்த இராமனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கத் தேவையில்லை. பள்ளத்தை நாடி ஓடும் நீரோடை போல அவள் அவன் பின்னே ஓடியிருக்கத் தேவையில்லை. அயோத்தியின் மன்னனாக முடி சூடவேண்டிய இராமன் தனது சிற்றன்னையின் ஆசையை நிறைவேற்றிய திருப்தியில் சயனத்தில் ஆழ்ந்திருந்தான். தம்பியை அரியணையில் ஏற்றியதோடு தனது தலையாய கடமை முடிந்து விட்டதாக அவன் நினைத்திருந்தான். தன்னையே நம்பியிருந்த சீதையின் விருப்பங்களைத் தெரிந்துகொள்ள அவன் முயற்சிக்கவில்லை. ஏனென்றால் சீதை அவனுடைய மனைவி அவனுக்கு பணிவிடைகள் செய்யவும் அவனுடைய விருப்பங்களை நிறைவேற்றவும் பிறப்பெடுத்தவள். இராமன் எனும் வட்டத்துக்குள்ளே நின்று சுழலும் பம்பரம் போன்றவள். அவளால் எந்தக் கோட்டையும் தாண்டி விடமுடியாது என்று தீவிரமாக நம்பினான் இராமன். முன் இரவு கடந்து நடுவானில் சந்திரன் தவழ்ந்து கொண்டிருந்தான், குடிசையின் மெல்லிய கிராதியினூடாக அவனது ஒளிக் கிரணங்கள் குடிசையினுள்ளே பட்டும் படாமலும் பரவின. தனது சோகத்தைக்கூட பகிர்ந்துகொள்ள யாருமின்றி தனிமையில் வாடியிருக்கும் சீதையை அவன் தெளிவாகக் கண்ணுற்றான். ஜனகனின் மகள்

தனிமையில் அழுவதற்கா இராமனை மணந்தாள். பாலில் குளித்து, பட்டுமெத்தையில் உறங்கிக் கொள்ளத்தக்கவள். இந்த ஏகாந்த இரவில் குச்சுக் குடிசையில் தனிமையில் வாடவேண்டும் என்பதைவிதியின் கரங்கள்தான் எழுதினவோ? இவளுடையகண்ணீரும் இவளைப் போன்ற இன்னோரன்னபெண்களின் கண்ணீரும் தான் இன்னும் வற்றாத நதிகளாக பூமியிலே ஓடிக் கொண்டிருக்கிறதோ? சந்திரன் பலவாறு சிந்தித்தான் சீதை ஒரு துயரமாகவே அவனது மனதில் பதிந்துபோகவே தன்னால் இனியும் அங்குதரிக்க முடியாது என்று எண்ணியவன் முகில்களால் தன் வதனத்தை மூடிக்கொண்டு அவ்விடத்தின்றும் அகன்றுபோனான்.

யுகங்கள் தோறும் தொடர்ந்துவரும் அவலம் ஒன்று அன்றைக்கு நிகழப் போவதை அறிந்து வானத்தைக் கிழித்துச் செந்நிறமாக்கி கிழர்ந்தெழுந்த சூரியன் அடர்ந்த மரங்களினூடே புகுந்து காட்டில் சலசலத்து ஓடிக்கொண்டிருந்த நீரோடையில் தங்கம் பூசிக்கொண்டிருந்தான். அந்த நீரோடையில் சீதை நீராடுவதற்கு இறங்கினாள். துயரில் சோர்ந்திருந்த உள்ளமும் உடலும் நீரின் அணைப் பில் ஆறுதலடைந்தன. இந்த நீரோடையும் தன்னைப் போலவே எங்கோ பிறந்து ஏதோ ஒரு பள்ளத்தை நாடி ஓடி வந்திருக்கிறது என எண்ணியவள் தன் தளிர் போன்ற மெல்லிய விரல் களால் அந்த நீரோடையை தடவிக் கொடுத்தாள். ஓடை நீரில் வாழைத் தண்டு போல மிதந்து கொண்டிருந்த அவளுடைய கால்களை ஓடையில் நீர் பருக வந்து நின்ற மான்கள் அதிசயமாகப் பார்த்துக்கொண்டு நின்றன.

சீதை நீண்டநேரம் நீராடினாள். இனி அவள் இந்த ஓடையில் இறங்க வேண்டிய தேவை இருக்காது என்பதால் கரைக்கு வந்தவள் சூரிய வெப்பத்தில் கூந்தலை உலர்த்தி காட்டு மலர்களைச் சூடிக் கொண்டாள். அவள் வைதேகியாக வாழ்ந்த நாட்களின் வசந்தம் இனி அவளால் தொட்டுவிட முடியாத தூரத்தில் தெரிகிறது. சிறிதேனும் எதிர் பார்த்திராத வாழ்க்கையை அவள் வாழவேண்டிய கட்டாயத்தில் இருந்தாள்.

அவள் வாழ்ந்த நாட்டையும் பெற்றோரையும் உறவுகளையும் துறந்து இராமனின் கரம்பற்றி நடந்து வந்த நாளை அவளால் மறக்கமுடியாது. கண்களில் பொங்கிய நீர்ப்பிரவாகத்தினூடாக சீதையின் உறவுகள் அவளையும் இராமனையும் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர். அது ஒரு அக்கினிப் பயணம் என அப்போது சீதைக்கு தெரிவதற்கு நியாயமில்லை. தன்னுடைய எதிர்காலமே இராமன் தான் என அவள் எண்ணியிருந்தாள். அன்னையும் பிதாவும் அருகிலிருந்த தோழிகளும் அவள் வாழ்ந்திருந்த அரண்மனையும் தேய்ந்து தூரமாய் மறைந்து போயின.

நீராடி உலர்ந்த கூந்தலை விரல்களால் வருடிவிட்டுக் கொண்டிருந்தாள் சீதை. அவளுடைய வாழ்வின் இறுதித் தருணங்கள் அவை

“

சீதை தன் ஏக்கம் பொதிந்த தன்
கண்களால் இராமனைப் பார்க்கிறாள்.
இராமன் எதுவித சலனமுமின்றி
அமைதியாக நின்றிருந்தான்.
அவனுடைய கண்களில் கலக்கம்
எதுவும் இருப்பதாக அவள்
காணவில்லை. இராமனின்
தேவையெல்லாம் தன்னுடைய
மனைவி தன் மானத்தைப்
பறைசாற்றுவதற்கு தீக்குளித்தாள்
என்கின்ற பெருமையே தவிர
வேறொன்றுமில்லை.

”

என தீர்மானிக்கப்பட்டதற்கு சான்றாக விறகுக் கட்டைகள் ஒன்றன் மேலொன்றாக அடுக்கப்பட்டு தீ வளர்ப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. அசோக வனத்தில் அரக்கிகளின் நடுவே அவள் எத்தனை துன்பங்களை அனுபவித்திருந்தாள். அவளுடைய உள்ளம் எவ்வாறெல்லாம் கலவரம டைந்திருக்கும் என்று எவரும் சிந்திக்கவில்லை. மாறாக அவள் குற்றமற்றவள் என்பதை உலகுக்கு நிரூபிப்பதற்கு அக்கினியில் குளிக்கப் பணிக்கப்பட்டு விட்டாள். பணித்தது இராமன் என்பதால் சீதை அந்த துன்பத்தையும் ஏற்றுக் கொண்டுவிட்டாள். ஏற்றுக்கொண்டாக வேண்டும் அதுவே சீதையின் விதி.

விறகுகள் எரிவதற்கு மனமின்றி புகைந்து கொண்டிருந்தன. ஆனால் காற்று விடுவதாக இல்லை. சிறு தீ மெல்லக் கிளர்ந்து மூண்டு கொண்டது. தீயின் நாக்குகள் மேலெழுந்து காற்றில் ஆடின. அசோக வனத்தில் தன்னை சுற்றித் தாண்டவமாடிய அரக்கிகளின் கோரப்பற்களாக அவை சீதையைப் பயமுறுத்தின. தேவர்களும் முனிவர்களும் அந்த இடத்தில் குழுமிநின்று வேடிக்கை பார்த்தனர். இந்த அக்கினிப் பரீட்சையில் சீதை சித்தியடைந்துவிட்டால் அவளைக் குற்றமற்றவள் என்று மூவுலகும் ஏற்றுக் கொள்ளும்.

சீதை தன் ஏக்கம் பொதிந்த தன் கண்களால் இராமனைப் பார்க்கிறாள். இராமன் எதுவித சலனமுமின்றி அமைதியாக நின்றிருந்தான். அவனுடைய கண்களில் கலக்கம் எதுவும் இருப்பதாக அவள் காணவில்லை. இராமனின் தேவையெல்லாம் தன்னுடைய மனைவி தன் மானத்தைப் பறைசாற்றுவதற்கு தீக்குளித்தாள் என்கின்ற பெருமையே தவிர வேறொன்றுமில்லை.

தீயின் நாக்குகள் சீதையின் தளிருடலைத் தீய்ப்பதற்குப் பேரார்வம் கொண்டு மேலெழுந்து வெப்பம் பரப்பின. அனல் தாங்க முடியாது வேடிக்கை பார்த்தவர்கள் சற்றுப் பின்னே நகர்ந்து நின்றனர். சீதை தன் இறுதிக்கணங்களில் கால் வைக்கிறாள். தீயின் அருகில் ஒரு வாழைக் குருத்தைப் போல அசைந்து செல்லுகிறாள் சீதை. சாந்த சொரூபியான அவள் தன் சாவின் களமான தீக்குழியில் கால்பதிக்கும் வேளை.....

“மகளே! நில்... நில் மகளே!...” அந்தக் கானகத்தையே கட்டிப்போடும் அளவுக்கு நீண்டு ஒலித்தது அந்தக் குரல். திடுக்கிட்ட சீதையை பலங்கொண்டு இழுத்து தன் மார்போடு அணைத் துக் கொண்டன அந்தக் கைகள். தலைவிரி கோலமாக கண்ணில் தெறிக்கும் கனலுடன் காட்சியளித்தாள் தர்மத்தின் தாய். அவளுடைய அரவணைப்பில் சீதையின் இதயக்கனம் உருகி கண்ணீராகப் பிரவாகித்தது. சீதையின் முகத்தை தன் இருகரங்களிலும் ஏந்தி அவள் விழிகளினூடே உற்று நோக்கினாள்.

“மகளே! நீ அழவேண்டாம். அக்கினியில் குளிக்கவும் வேண்டாம். நீ சாவைத் தேடித்தான் உலகத்துக்கு உன்னை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இதோ நிற்கின்ற இவன் உன் கணவன் இராமனே அல்ல. சீதையின் உணர்வு களை புரிந்து கொள்ள முடியாத எவனும் இராமனாக இருக்க முடியாது. இவனுக்காகவே நீ எல்லாவற் றையும் துறந்தாய். இப்போது உன் உயிரையும் துறக்கத் துணிந்துவிட்டாய். ஆனால் இந்த இராமன் உனக்காக என்ன செய்தான்? உன் சுகத்தைப் பற்றி கடுகளவும் சிந்திக்காத இவன் இராமனாக இருக்க முடியாது. நீ சாக வேண்டாம் மகளே! நீ என்னோடு வா”

தர்மத்தின் தாய் சீதையின் கரம் பற்றி நடந்தாள். தேவர்களும் முனிவர்களும் ஏன் இராம னும் செய்வதறியாது திகைத்து நின்றனர். அவர்கள் போகும் பாதை நீண்டு கொண்டே செல்கின்றது. ■



ஈரலிப்பாய்
பிரபஞ்ச வெளியையும்
தாண்டி என்னுள்
படித்தபடி

இன்னமும் ஏதோ
புதிய அர்த்தப்பாடுகளுக்காய்
காத்து நிற்கின்றேன்.

## சிதைவுகள்

உன் உணர்வுகளை
மதிப்பதற்கு – நான்
தயாராகின்றேன்
நீ என்
மனசாட்சி என்பதால்

உனது திசைநோக்கிய
பயணத்தில்
நானும் உரசிக் கொள்கின்றேன்
ஊமைக்காவியமாய்

சொல்லாத சேதிகளாய்
சேகரித்து வைத்திருக்கும்
சிதைவுகளை சிதறியபடி
நீயும் எனக்குள்
ஐக்கியமாகிவிட்டாய்

## புதைந்தவைகள்

அன்று அந்த இரவு
நிசப்தமாய் இருளை
ஏராளமாய் விழுங்கியபடி
இரவின் வருகைக்காய்
காத்திருந்து
நடந்து வருகையில்
தொலைவிலிருந்து
காலடியோசை அண்மித்து
வருவது போல்
காற்றுக் கூட
அன்றைக்கு இல்லாதது
போலிருந்தது.

என்ன நடந்திருக்கும்
ஏக்கம் ஒருபுறம்
என்னை விரட்டியபடி
எனனுடைய தேசம்
நசுக்கப்படுகிறது.

# இறக்கைகள்



எனது உறவுகள்
எரிக்கப்படுகின்றன
சாம்பல் மேட்டில்
எனது கால்கள்
புதைந்து போகின்றன.

எனதுமூச்சு
எனது இருப்பு
தொலைந்த இடத்தைத்
தேடுகின்றேன்.
தெருக்களில் இன்னும்
தேடல்கள்

மௌனமாய் அந்த இரவு
மரணித்து விட்டது
தொலைவில் கேட்ட
காலடியோசை
காணாமல் போய்விட்டது
இன்னும் எத்தனை
தலைமுறைகள்
இந்த நரகத்திற்குள்.



**நி**ஜங்களைத் தொலைத்த – அந்த
இரவுக்குள்
கனவுகளைக் காற்றில்
சுமந்து கருத்தரித்தேன்.

பூமிப்பந்தில் இன்னுமொரு
புதிய பயணத்துக்காய்
தயாராகின்றேன்
நானும் தரிப்பிடமாய்

இலக்கு நோக்கிய – என்
இலட்சியங்கள் எல்லாம்
தடயங்களற்று
தரை வெடித்து
தலை குப்பற
வீழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

மீண்டும் ஒரு யுகப்புரட்சிக்காய்
பயணிக்கத் தயாராகியது
எனது வெற்றிடங்கள்

குருதியும் சதைகளும்
யுகம் யுகமாய்
கோர்க்கப்பட்டவைகள்...?
இன்னும் அடையாளமாய்
என்னுள் எஞ்சியிருக்க


காலங்கள் மட்டும்
கடுகதியாய் இன்னுமொரு
இறக்கையைத் தேடி.......

□

# தாழங்குடாவில் இருந்து வதனா

நான் தாழங்குடாவை சேர்ந்தவள் என் குடும்பதில் அம்மா, அக்கா மற்றும் அண்ணனும் உள்ளனர். அண்ணனும், அக்காவும் திருமணமாகி தனியாக சென்று விட்டனர் எனக்கு இன்னும் திருமணமாக வில்லை. எனது அம்மாவை வைத்து பராமரிக்கின்றேன். நாங்கள் தனியாகவே ஓலைக் குடிசை வீட்டில் வாழ்கின்றோம். அப்பா இறந்து விட்டார். அதன் பிறகு நாங்கள் வறுமையில் மிகவும் கஸ்டப் பட்டோம். அப்போது எங்கள் அன்ரியின் மகன் எங்களுக்கு உதவி செய்தார். ஆனால் அவர் இராணுவத்தால் வீட்டில் வைத்தே 2008ம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார் அதன் பிறகு எங்களுக்கு என்ன செய்வ தென்றே தெரியவில்லை அவரின் இழப் பினை எங்க ளால் தாங்க வே முடியவில்லை நாங்கள் செய்வதறியாது திகைத்து நின்றோம்.

அதன் பின்னர் நான் ஏதாவது சுயதொழில் செய்து உழைக்க வேண்டுமென்று தீர் மானித்தேன். சூரியா நிறுவனம் எங்கள் ஊரில் கஷ்ரப்படும் பெண்களுக்கு உதவி செய்யும் பொருட்டு வாழ்வாதார திட்டம் ஒன்றினை தொடங்கியது. இத்திட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொள்வதற்கான காரணங்கள் கஷ்டத்தின் மத்தியில் திருமணம் செய்யாமல் வீட்டில் தலைமை தாங்கி நடாத்துதல், ஓலைக் குடிசை வீட்டில் வாழ்ந்தமை, தொழில் செய்ய ஆர்வமாக இருந்தாலும் அதற்கேற்ற மூலதனம் இல்லாமை, சமூர்த்தி முத்திரை பெறல், கவனிப்பதற்கு யாரும் இல்லாத நிலை இக் காரணங்களினால் வாழ்வாதார திட்டத்தில்



என்னையும் பயனாளியாக தெரிவு செய்து எனக்கு தொழில் தொடங்க 15,000 ரூபா மானியமாக தருவதாக கூறினார்கள். என்ன தொழில் செய்யலாம் என யோசித்தேன் இறுதியில் என் அக்கா தையல் தொழில் செய்தால் உழைக்கலாம் என்றார்.

எனவே அப்பணத்தினை பெற்று காத்தான்குடி சென்று சீத்தை துணி, பப்பிளின் துணி, பஞ்சாபித் துணி, நைட்டி, கொட்டுன் துணி போன்றவைகளை வாங்கி வந்து அயலவர் களுக்கு விற்க தொடங்கினேன். நான் மொத்தமாக எடுப்பதால் எனக்கு விலை குறைத்து தருவார்கள் கடைக்காரர்கள். கடனுக்கு துணி வாங்க சொல்லி வற்புறுத் துவார்கள் நான் ஒருபோதும் கடனுக்கு துணி வாங்குவது இல்லை. ஏன் என்றால் கடனுக்கு துணி வாங்கினால் விலையை குறைக்க முடியாது. கடனை கட்ட முடியாமல் போனால் அவர்கள் வீடு தேடி வருவார்கள். துணி வாங்குவதற்கு அக்கா அல்லது அயலவர் களை அழைத்துச் செல்வேன். பஸ்ஸில் தான் போய்வருவேன் ஏன் என்றால் முச்சக் கரவண்டிக்கு பணம் தருவதற்கு நான் எனது இலாபத்திலிருந்து தானே கொடுக்க வேண்டும்.

இவ் வியாபாரமானது தைப்பொங்கல், சித்திரை வருடபிறப்பு, புதுவருடபிறப்பு,

நத்தார், தீபாவளி, விசேட நாட்கள்...... போன்ற தினங்க்ளில் மாத்திரமே கூடுதலாக விற்பனையானது. மற்றைய நாட்களில் ஒரு சில துணிகள் தான் விற்பனையாகும். அன்றாடம் வருமானத்தின் மூலம் இலாபம் வரக்கூடிய மாதிரி தொழில் செய்ய முடிய வில்லை. என் நாளாந்த செலவிற்கு என் வருமானத்தில் இருந்து வரும் இலாபம் போதாமை காரணமாக இதற்கு என்ன செய்யலாம் என சிந்தித்த வேளை எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அதாவது நாளாந்த சீட்டு ஒன்றை தொடங்கலாம் என்று. இந்த யோசனை வரக்காரணம் நாளாந்தம் வருமானம் கிடைக்கப்பட வேண்டும். துணி தினமும் விற்கப்பட வேண்டும். அவ்வூரில் வசிக்கும் அயலவர் கள், உறவினர்கள், நண்பர்கள் போன்றோரி டம் சீட்டு ஒன்றை தொடங்க எண்ணியுள் ளேன் என்று விளம்பரப்படுத்தினேன். நைட்டி துணி, பஞ்சாபித் துணி போன்ற இரண்டு துணிச் சீட்டைப் போட்டேன். இதிலிருந்து நாளாந்த வருமானத்தில் இலாபமாக 150/= தொடர்ச்சியாக கிடைத்து வருகிறது.

ஆனால் கிட்டத்தட்ட இத்தொழிலில் எனக்கு சராசரியாக மாதம் ஒன்றிற்கு ரூபாய் 3500 – 5500 இலாபம் கிடைக்கும். ஒவ்வொரு துணியையும் விற்ற பின்னர் எவ்வளவிற்கு அத் துணியை வாங்கினேன். அத்தோடு அத் துணியை எவ்வளவிற்கு விற்றேன். ஆகை யால் எவ்வளவு இலாபம் வருகின்றது என எழுதி வருவேன். போட்ட முதல் பணத் தினை தனியாகவும், இலாபத்தினை தனியாக வும் எடுத்து வைப்பேன். இந்த இலாபத்தின் ஒரு பகுதியை தான் நான் எனது அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்துகிறேன். அதுமட்டுமன்றி அநாவசிய செலவுகளை செய்யாது தேவையான செலவுகளை மட்டும் செய்து பணத்தை சேமித்து அத்தோடு இத்தொழிலில் இருந்து எவ்வாறு பணத்தை சேமிக்க முடியுமோ அவ்வாறு சேமித்து வருகிறேன். எனது எதிர்கால கனவு இச் சேமிப்பின் மூலம் எனது ஊரில் பெரிய துணிக்கடை ஒன்றை திறந்து ஒரு பெரிய துணிக்கடை முதலாளி ஆவது தான் எனது ஆசை, கனவு, இலட்சியமாகும்.

இந்த மானிய உதவியை பெற்ற பிறகு எனக்கு அதிக உற்சாகம் பிறந்துள்ளது. நாங்கள் சோம்பேறியாக இல்லாமல் எப்படியாவது உழைக்க வேண்டும் என்ற எண்ணம் கூடியுள்ளது. எனக்கு பிறரின் உதவியோ அவர்களின் ஆதரவோ தேவை யில்லை. என்னால் என் சுயமுயற்சியை கொண்டு தன்னம்பிக்கை உடைய பெண் ணாக எனது தாயாரையும் வைத்து பரா மரித்து சமூகத்தில் நல்ல நிலையில் வாழ முடியும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.


எனது முன்னைய (பழைய) நிலையை மீட்டு பார்க்கும் போது, சமூக கட்டுப்பாடுகளுக்குள் முடக்கப்பட்டு வெளியில் சென்று எவ்வித வேலைகளையும் துணிந்து செய்யமுடியாத ஒரு பெண்ணாகவே காணப்பட்டேன். அத்தோடு எனது அன்றாட வாழ்க்கையை நிறைவேற்ற கூட பிறரின் உதவியை எதிர்பார்த்து நின் றேன். அதுமட்டுமன்றி எனது எதிர்காலத் தின் எனது வாழ்க்கையின் நிலைதான் என்ன என்ற கேள்வி எனக்குள்ளே எழுந்துகொண்டி ருந்தன. ஆனால் தற்போது **“நான் யாரிட மும் எந்த உதவிக்கும் செல்வதில்லை. முன்னர் யாராவது உதவி செய்தால் அவர்கள் தப்பாக நினைத்துவிடுவார்கள் என்று கருதி அப்பணத்தில் நான் விரும்பி யதை வாங்கமுடியாது, சாப்பிட முடியாது தற்போது என்னட்ட பணம் இருக்கிறத னால் என்னால் விரும்பியதற்கு செலவ ழிக்க முடியும். ஒருவரிடம் உதவியை**

**நாடி ஒருதடவை மாத்திரமே செல்ல முடியும். எனவே இந்த சுயதொழில் என்னை சொந்த காலில் நிற்க வைத் துள்ளது"**

"முன்னரைவிட தற்போது எங்களுக்கான மூன்று வேளைச் சாப்பாடும், எனது தேவை களையும் பூர்த்தி செய்வதும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பது தான் இந்தத் தொழில் எனக்கு கிடைத்த மாற்றமாக நான் கருதுகிறேன்".

"எனது அண்ணனிடம் ரோட்டோரமாக கடை ஒன்று உள்ளது. எனது துணியை வைத்து வியாபாரத்தினை மேற்கொள்ள அதில் சிறிய இடம் ஒன்றை தருவதாக கூறியுள்ளார். எனது கனவுக்கு அடித்தளமாக ஜனவரியிலிருந்து அக்கடையிலேயும் துணியை வைத்து வியாபாரம் செய்ய எண்ணியுள்ளேன்".

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய
வாழ்வாதார மதிப்பீட்டறிக்கை.
*ஆய்வு :* G.S.S. பெர்ணான்டோ



அன்று அதர்மத்தின் தாண்டவத்தில்
அடிக்கடி நீ அவதரித்தாய்
தர்மத்தை நிலைநாட்டி – மனங்களிலே
இடம் பிடித்தாய்!

இன்று அதர்மத்தின் ஆட்சியிலும்
உன் வரவைக் காணவில்லை
காத்திருந்த..... பார்த்திருந்த.....
எம் விழிகள் மூடவில்லை!

அவதாரமாகும் முன்பே
அபோஷன் – ஆனாயோ?
பெண்ணாக உயிர்படைத்து
கருச் சிதைக்கப்பட்டாயோ?

மனிதனாய் அவதரித்தால்
மனம் மாறிப் போவாயோ?
நீயுமா இப்படி? —என
பேதலிக்க வைப்பாயோ?

வில்லுடைத்து வீரம் காண்பித்த
இராமனாய் நீ வேண்டாம்!
அன்னையின் ஆணைக்காய்
காடாளச் சென்றவனாய்
நீ வேண்டாம்!
கட்டிய மனைவியை
தீக்கிரையாக்கிய துணைவனாய்
நீ வேண்டாம்.

கன்னியர் உள்ளம் கண்டபடி
கலக்கமுற – லீலைகள் புரிந்திடும்
கண்ணனாய் நீ வேண்டாம்!

சுதாகினி டெல்மன் ராகல்




கல்முனை வீதியில் இடதுபுறத்தே கிளை யாறாய் பிரிகிறது ஒரு ஒற்றையடிப் பாதை. அது சென்றடைவது ஐம்பது குடும்பங்களைக் கொண்ட ஒரு சிறு தீவுபோலுள்ள பிட்டியத் துறைக் கிராமத்தை ஆகும்.

“எனக்கு பெரிய ஆசைகள் இல்லை. என்னிடமிருந்து பறித்த என்னுடைய பிள்ளையை திரும்பப் பெறவேண்டும் என்பது மட்டும்தான்” எனக் கூறும் பரமேஸ்வரி பாக்கியநாதனின் வீடு இருப்பதும் இந்தப் பிட்டித்துறைக் கிராமத் தில்தான். பிட்டித்துறையின் சாதாரண வரலாற் றைப் போலவே பரமேஸ்வரியின் வரலாறும். வாழ்வின் மொத்தத் துயர் அனைத்தையும் குத்தகைக்குப் பெற்றது பரமேஸ்வரியின் வாழ்க்கை. மாறிமாறி இன்பமும் துன்பமும் வரும் என்பதைப் பொய்யாக்கியதும் பரமேஸ்வரி யின் வாழ்க்கை. எனக்கு எதுவுமே புரிய வில்லையென்று எல்லாவற்றையும் அலுத்துக் கொள்ளுமளவுக்கு அவளின் மனதினையே ரணமாக்கிவிட்டதும் அதே வாழ்க்கைதான்.

“பதினேழு வயசிலே கலியாணங்கட்டி இத்தன பிள்ளைகளையும் பெத்தும் எனக்கு ஆறுதல் இல்லை” என்ற பரமேஸ்வரியின் கூற்று அந்த வாழ்க்கை கொடுத்த வாக்குமூலமே.

படுவான்கரைக் கிராமங்களில் ஒன்று மண்டூர். தேர்தல் காலங்களில் மட்டுமே உருப்பெருக்கித் தெரியும் கிராமம். இருபது வருடங்களுக்கு மேலாக எவ்விதமான புணர மைப்புக்களும் அற்ற வீதிகளும், திருவிழாக் காலங்களில் தோன்றி மறையும் மிட்டாய்க் கடைகளின் பிரமிப்பினைப் போல் தோன்றி மறையும் பஸ்வண்டிகளும், அடிக்கடி இழுத்துக் கொள்ளும் மிதவைப் படகுச் சேவையும், பெரும் பாலான மருந்துகளை வெளிக்கடைகளில் வாங்கச் சொல்லும் மருத்துவமனையும் உள்ள சாதாரண கிராமம் மண்டூர்.

இத்தகைய சூழலிலிருந்து மிகவும் பிற்பட்டதாக விலகி நிற்பதாக உள்ளது பிட்டியத் துறைக் கிராமம். மீன்பிடியையும், கூலித் தொழிலையும் பிரதான வருமான வாயிலா கக் கொண்டது பிட்டியத்துறை கிராம மக்களின் வாழ்க்கை முறை. 50 குடும்பங் களிலுமுள்ள பிள்ளைகளும் சிறுவர் பாடசாலை, பிரதான மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கல்விகற்பவர்கள். குடும் பங்களில் அனேகமான வீட்டுத் தலைவர் கள் உடலுழைப்பை உடையவர்கள். அன்றாடம் தமது வருமானத்தையும் அதனை நாளைக்கும் பயன்படுத்த வேண்டிய தேவையும் கொண்டவர்கள். இன்னும் சிலர் கொஞ்சம் சேமித்து ‘சிறுகடை’ போன்றவற்றின் மூலம் வாழ்க்கை நடத்துபவர்கள். அறுவடை காலங்களில் களத்துமேடு சென்று கதிர் பொறுக்கி பருவகாலத்தை உரிய முறையில் பயன்படுத்தும் பெண்கள் சிலர்... என அமைந்தது பிட்டியத்துறை வாழ்க்கை கோலங்கள். அனேகமான வர்கள் இந்து மதத்தை சேர்ந்தவர்கள்.

“நாங்கள் சுத்தமான கோயில் சாதி. ஆனா தலைவிதி மீன்பிடித்துச் சாப்பிட வைக்கிறது” என விம்மும்படி பரமேஸ்வரிக் கும் இவ்விதி வரையப்பட்டுள்ளது.

அது பரமேஸ்வரியின் வீடு [?] வசதிபடைத்த மக்களின் நாய்க்கூடுகளையும் விடச் சிறியது. விநாயகத்தை பிரியும் வரைக்கும் மொத்தம் 5 பிள்ளைகளும் தானும் சுருண்டு கொண்டு வாழப்பழகிய வீடு. களிமண்ணில் மெழுகப்பட்டதும் மிகத் தாழ்ந்த கூரையும், வெடித்த ஓடுகளும் கூரையில் தெரிகின்றது. முன்னே சிறிய தாழ்வாரம். காற்றுத் தள்ளும் 'வெளியில்' சமையல். கதவினை கட்டிலாக்கி இரவில் நோயுற்ற மகனை படுக்கவைக்கும் பாசம்.

முற்றத்து வேம்பில் நல்ல இளங்காற்று. அதற்கு விலையில்லை. அதனை வடிகட்டும் விரிந்த விளாமரமும், அருகே சிறு விளாக்கன்றுகளும், அரை ஏக்கர் நிலத்தின் பின்பகுதியில் நெருங்கியபடி நிற்கும் மூன்று பனை மரங்களும், அதனை அணைத்து அலையடிக்கும் ஆற்றுவெளியும் பரமேஸ்வரியின் வீட்டிலிருந்து பார்க்க ரம்மியம்மானது. ஆனால் அனைவரையும் வரவேற்பதாய் வாசலின் முற்புறத்தே பெருத்த பசுவும் சாணங்கட்டிய நிலத்தில் துள்ளும் மூன்று கன்றுகளும்தான். கோழிக்கூடு – பரமேஸ்வரியின் மனதினைப் போல் வெறுமையடைந்து கிடக்கிறது. மேயவிடப்பட்ட மூன்று கோழிகளோடு.

> "நாங்கள் சுத்தமான கோயில் சாதி. ஆனா தலைவிதி மீன்பிடித்துச் சாப்பிட வைக்கிறது"

"நிலத்தின் அரைப்பங்கை விற்றுத்தான் மூத்தவரின் (மூத்த மகன்) நோய்க்கு செலவளித்தது. தோணி வலையெல்லாம் போயிற்று, நமக்கென்ன உழைப்பா கிடக்கு? சின்ன வயதிலிருந்தே கஷ்டம், அப்பாவோடு இருக்கும் போது வயலுக்கு போய், மாடு மேய்த்து, வரம்பு செருக்கி, வெள்ளாண்மை வெட்டி ஆம்பிள இல்லையென்று நாங்கள் பெண்களாகச் சேர்ந்து கஷ்டப்பட்டுத்தான் வயிற்றைக் கழுவினோம்."

பரமேஸ்வரிக்கு 9 சகோதரிகள். பரமேஸ்வரி 4வது பிள்ளை. ஆண் சகோதரர்கள் இல்லை. அத்தனை பிள்ளைகளுக்கும் வயல் விதைத்து உணவும் உடையும் மட்டுமன்றி சமுதாயத்தில் பெண்களுக்குள்ள நியதியையும் நிறைவேற்றி, காடு வெட்டி நிலம் சேர்த்து அத்தனை பெண்களுக்கும் வீடு கட்டி, திருமணமும் செய்து வைத்தார் பரமேஸ்வரியின் தந்தை. அவர் ஒரு நல்ல தந்தை. ஆனால் பரமேஸ்வரியின் குழந்தைகளுக்கு நல்ல தந்தையாய்க் கிடைக்கவில்லை. கடைசிக் குழந்தை பிறந்து 3 மாதங்களாக இருக்கும்போதே 'தன்னால் இனி உழைக்க முடியாது' என்று குடும்பத்தை கைவிட்டு வெளியேறினார் பரமேஸ்வரியின் கணவர். 5 பிள்ளையோடு அம்பலத்தில் நின்றவள் பரமேஸ்வரி. உழைக்காமலே உண்ணக்கூடிய தைரியம். சில வேளைகளில் ஆண்களுக்குத்தான் வாய்ப்பாக அமைகிறது. ஆனால் ஒரு தாயால்...?

5 குழந்தைகளோடு அதிலும் மூத்த மகனுக்குரிய நோயோடு, வாழ்க்கையின் எல்லாத் துயர்களோடும் போராட நேர்ந்ததாக பரமேஸ்வரி கூறுகிறார்.

"17 வயதிலே கலியாணம் கட்டினேன். பிள்ளை பிறந்த சந்தோஷம் கூட இல்லை. சின்ன வயதிலேயே சுகமில்லாமல் போய் விட்டது. அதற்குள் வன்செயல் பிரச்சனைக்குள் என் கணவரை ஆமிக்காரன் கொண்டு போய் ஒன்றரை வருடம் பூசாவில் அடைத்து வைத்தான். உழைப்புமில்லை, உழைக்கவும் ஆளில்லாமல் சின்னப்பிள்ளைகளோடு கஷ்டப்பட்டேன். பிள்ளைகளை ஓரளவு வளர்த்து எடுக்க அவரும் விட்டுத்துப் போய் விட்டார். போனதெல்லாம் போகட்டும், நமக்குத் தண்ணீரென்றாலும் தருவதற்கு நம் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று மனதை தேற்றிக்கொண்டு இருக்கும்போதுதான் இவனுகள் உழைத்துத்தரும் எனது பிள்ளை

யைக் கொண்டு போயித்தானுகள். இப்படி யென்றால் என் வாழ்க்கை என்ன நீதியென்று தான் எனக்கு விளங்கவில்லை. இது விதியா? மனுஷ வினையாவென்று எனக்கு ஒன்றுமே புரியவில்லை...."

பரமேஸ்வரியின் வாழ்க்கை யாருக்குத் தான் புரியப்போகிறது? 'துன்பம் வரும்போது சிரியுங்கள்' என்று கூறிய வள்ளுவருக்குகூட பரமேஸ்வரியின் வாழ்க்கை புரியப்போவ தில்லை. சுதந்திரங்களுக்கான, சுதந்திரங் களின் பேரிலான போர் மயானங்களையும், நெருங்கிய கல்லறைகளையும் கடந்ததுதான் எனினும் பரமேஸ்வரி போன்றவர்களின் வாழ்க்கையை, மனதை ரணமாக்கியும் கூடத்தான் நிகழுமா?

போராட்டங்கள் நீண்ட வரலாற்றோடும் எண்ணற்ற தியாகங் களோடும் முன்னெடுக்கப்படுகிறது. ஒடுக்கப்படும் இனங்களின் விடுதலை யாளர்களுக்கெல்லாம் முன்மாதிரி யாகத் தென்படுமளவிற்கு முன்னேற்றங்கள். அரசுக்கும் விடுதலைக் குழுவிற்குமான சமாதான உடன்படிக்கையின் பின்னர் மக்கள் தங்களின் ஓரளவான இறுக்கங்களை குறைத்து அமைதியின் நீண்ட வாயிலின் முன்படியில் நின்று கொண்டிருக்கும் வேளை அமைதிக்கு அமைதியற்ற விதத்தில் 'படை திரட்டல்' இடம்பெறுகின்றது.

இது விநாயகம் (வயது 16) போன்ற வர்களின் எதிர்காலத்தையும் பரமேஸ்வரி போன்ற தாய்மார் மனநோயாளிகளாகவும் மாற்றும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது. மனித வினைக்கும், தனது தலைவிதிக்கும் வியாக்கி யானம் தெரியாத பரமேஸ்வரி போன்ற அன்றாட வாழ்வையே கேள்விகளோடு வரவேற்கும் ஏழைத் தாய்மார்களின் மொழி யில் வலுவுமில்லை.

பரமேஸ்வரியின் வறுமைக்கெல்லாம் முடிவு கட்டி, மற்றவர்களைப்போல் தனக்கும் ஒரு நல்வாழ்க்கையை (வீடு, நகை, பணம் வசதிகளோடு) உருவாக்கி கணவனால் அமையாதவற்றையெல்லாம் மகன் ஆக்கித் தருவான் என்ற நம்பிக்கை தந்து ஆற்ற லோடு வளர்த்த, வளர்ந்த மகன் விநாயகம். எட்டாம் ஆண்டு பூர்த்தி செய்து, 9ம் ஆண்டு வகுப்பினைந்து 3 மாதங்கள் கடந்த நிலையில் வறுமையின் காரணமாக படிப்பை நிறுத்திவிட்டு, வாகனங்கள் திருத்தும் நிலையம் ஒன்றில் (கராச்) வேலைக்கு சேர்க்கப்பட்டான். தினமும் அரிசிக்கும் கறிக் கும் செலவிட்ட பின்னரும் சேமிக்கத்தக்க வருமானம். மூத்த பிள்ளையின் உடல் நோயையும், மகன் விநாயகத்தின் உழைப் பாற்றல், ஊக்கம், 'மற்றவர்களைப் போல் உன்னையும் வாழவைப்பேன் அம்மா' எனக் கூறும் ஆறுதல்களால், சுகப்படுத்தி விடும் என்று எண்ணச் செய்த மகன் விநாயகம் "அவனுக்குத் தெரியாத தொழிலில்லை, மற்றப் பிள்ளைகளைக் காட்டியும் விநாயகம் நல்ல வலுவானவன், நன்றாகப் படிக்கக் கூடியவனும்தான். என்ன செய்வது நமது குடும்பத்தவர் நிலையால் வேலைக்குப் போனவன். அங்கேயும் நல்ல கெட்டித்தனம் தானாம். போய்ச் சேர்ந்த கொஞ்ச நாளி லேயே எல்லா வேலைகளையும் நன்றாக பிடிச்சுத்தானாம்." என்று அவனோடு வேலை செய்கிற இடத்திலுள்ள பிள்ளைகள் சொன்ன துகள். "இன்னும் கொஞ்சம் வயசு ஏறட்டு மம்மா நான் எப்படியாவது நல்லா உழைச்சு, உன்னையும் மற்றவர்களைப் போல நல்ல வசதியாய் வைத்துத்தான் காட்டுவேனம்மா" என்று என்னுடைய பிள்ளை ஆறுதல் சொல்லுவான். என்ர சீதேவிப்பிள்ளை...... அப்படிப்பட்ட பிள்ளையை என்னிடமிருந்து பறித்துவிட்டானுகள்... (அழுகிறாள் பரமேஸ்வரி). பரமேஸ்வரிக்கு நம்மிடம் ஆறுதலில்லை. எம்மோடு கதைத்து அவளுள் அழுத்தியிருக்கும் வேதனை கரையும்வரை அழுவதைத் தவிர நம்மிடம் ஆறுதலில்லை. பரமேஸ்வரிக்கு 5 ஆண் குழந்தைகள். விநாயகம் 2வது பிள்ளை. மூத்தபிள்ளை செல்லத்துரை, அடுத்தடுத்து 11, 09, 03

வயதுகளில் விமலன், புண்ணியன், குட்டி. மூத்த பிள்ளை செல்லத்துரைக்கு தீராத நோய். வெயிலில் சென்றால் மயக்கமும் குருதியும் வெளியேறும் நோய். உழைக்க முடியாது படிப்பும் நின்றாயிற்று. குடும்பத் தின் அத்தனை பேருக்குமான செலவும் விநாயகத்தின் உழைப்பில்தான் தங்கியி ருந்தது. பரமேஸ்வரியின் சகோதரிகள் அத்தனை பேரும் வாழ்வைச் சவாலாக எதிர் காண்பவர்கள்தான். எனினும் அன்றாட வாழ்க்கை அவர்களுக்கு சுமையில்லை. கணவர்களுக்குத் தெரியாமல் பரமேஸ்வரி க்கு உதவி என்று சிறு சிறு செயல்களைச் செய்வார்கள்.

1. விநாயகம் திரும்பி வரவில்லை. பரமேஸ்வரி இன்னும் நம்புகிறாள்; விநாயகம் திரும்புவான், திரும்ப வேண்டுமென்று விநாயகத்தை தன்னி டமிருந்து பிரித்த வரலாற்றை பரமேஸ்வரி விபரிக்கின்றாள்:

“விநாயகத்தைப் பிடித்தது எல்லாருக் கும் நன்றாகத் தெரியும், தங்களுடைய Base (தளம்) ஒன்றுக்கு வேலைக்கு வரச் சொல்லி வீடுவீடாய் வந்து கூப்பிட்டார்கள். ஒரு நாள் இந்த நேரத்திற்கு வரவேண்டு மென்று சொல்லிவிட்டு போனார்கள். அடுத்த நாள் மூத்தவருக்கு சுகமில்லாமல் போய்விட்டது. அதனால் எங்கள் வீட்டுக் கணக்கில் விநாயகம்தான் போனான். மற்ற வீடுகளில் வேலைக்குப் போகிற அளவிற்கு பெரிய பிள்ளைகள் குறைவு. எல்லோரும் பள்ளிக்கு போகிற பிள்ளைகள். எல்லோரும் பள்ளிக்குப் போய்விட்டார்கள். சின்ன ஆட்கள் தானே. விநாயகத்தோடு பக்கத்து வீட்டுப் பொடியன் ஒருவனும் சேர்ந்து வேலைக்குப் போனான். மதியமும் கடந்தது. வேலைக்குச் சென்ற பிள்ளை வரவில்லை. பின்னேரம் வரைக்கும் ஆள் வரும் என்று பார்த்து ஆள் வரவில்லை. நாங்கள் போய்ப் பார்க்கலா மென்று Base (தளம்)க்கு முன்னாலுள்ள இடத்திற்குப் போய்க் கேட்டோம். “அப்படி யொரு ஆள் இங்கு வரவில்லை. நாங்கள் கொண்டுவரவுமில்லை, நீங்கள் போகலாம்” என்று என்னை அனுப்பிவிட்டார்கள். பிள்ளையை அங்குதான் வைத்திருக்கி றார்கள் என்று நாங்கள் அறிந்தோம். திரும்பி வந்து அழுதுவிட்டு அடுத்தநாள் போனோம். அங்கிருந்த பிள்ளைகள் எல்லோரையும் வேறு இடத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். அவ்வளவு தூரம் போவதற்கு எம்மிடம் வாகன வசதியில்லை. நடந்துதான் போக வேண்டும். அம்மாவும் கூட வந்தவர். அன்று மதியம் கடும்வெயில். மாலை கடும் மழை. நனைந்து சாப்பாடுமில்லாமல் தொப்ப மாகிவிட்டோம். அது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் என்ன செய்வது. நமது பிள்ளையை எப்படியாவது எடுத்து வந்து விடவேண்டு மென்ற வேகத்தில் எல்லாவற்றையும் மறந்து விட்டோம். “என்ட பிள்ளையைக் காட்டுங்க” என்று கிடந்து கத்தினேன். திரும்பி திரும்பி கத்தினேன். பிள்ளையை காட்டவும் இல்லை. நாங்கள் கொண்டு வரவில்லை என்பதைத் தவிர வேறு பதிலுமில்லை. ஒவ்வொரு நாளும் அம்மாவிலிருந்து ஒவ்வொரு சகோ தரியாய் கூட்டிக்கொண்டு அலைந்தேன். சகோதரிகள் என்றபடியால் என்னுடைய துன்பத்தில் அவர்களும் பங்கு எடுத்தனர். வேறு வழி செய்ய அவர்களுக்கும் தெரிய வில்லை.

17 நாளாயிற்று. பிள்ளை கிடைக்க வில்லை. நாங்கள் நெருப்பும் மூட்டவில்லை. என்னுடைய பிள்ளையின் முடிவு தெரியாமல் ஒன்றுமே செய்வதில்லை என்ற முடிவில் நானிருந்தேன்.

பிள்ளையை மோட்டார் சைக்கிளில் வேறு பக்கம் கொண்டு போய்விட்டார்கள் என்று நாங்கள் ரகசியமாய் அந்த இடத்தை யும் அறிந்தோம். தெரிந்த ஆள் ஒருவரை கூட்டிக்கொண்டு விடியற்காலை 5.00 மணிய ளவில் சைக்கிளில் போனோம். மதியம் 1.30 மணிக்குத்தான் போய்ச் சேர்ந்தோம். இடம்

தெரியாததால் சுற்றி சுற்றி அலைந்தோம். நேரமும் போய்விட்டது.
அந்த இடத்தை பெரிய பரப்பில் வேலிய டைத்து வைத்திருக்கிறார்கள். நான் சென்ற பக்கத்திற்கு எதிரே ஒரு பொடியன். அவன் கையில் விரிந்தபடி ஒரு டயரி இருந்தது. நான் அந்த இடத்தை கண்டவுடனே அதனை நோக்கி ஒடத் தொடங்கினேன். பிள்ளைகள் எல்லோரும் என்னைப் பார்ப்பதைக் கண்டு அந்தப் பொடியன் கழுத்திலே கிடந்த விசிலை எடுத்து ஊதினான். அப்போது நான் கண்டேன் பிள்ளைகள் எல்லோருக்கும் தலைமயிர் வெட்டி அலங்கோலமாக இருந்ததை. இந்தக் கோலத்தை பார்க்க எனக்கு பொறுக்கவில்லை. கண்டவுடனேயே கத்திக்கொண்டு உள்ளே ஓடினேன். பொடியன் விசில் அடிச்சி எல்லாப் பிள்ளை களையும் ஒன்றாக்கி ஓடச் செய்தான். உள்ளே புகுந்த என்னிடம் 'ஐயோ' அம்மா இதற்குள் எவரையும் விடுவதில்லை. நீங்கள் ஏனம்மா வந்தது'' என்றான். நான் போக வில்லை, கத்தினேன். அந்தச் சத்தத்தை கேட்ட ஒரு பெடியன் நின்றான். மற்றவர் களெல்லாம் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவன் என்னுடைய பிள்ளை விநாயகம். தலையைச் சொறிந்து, சொறிந்து கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி போனான். "ஐயோ என்னுடைய பிள்ளை போகிறா னப்பா, அவனை விடுங்கள்'' என்று கத்தி னேன். மீண்டும் மீண்டும் கத்திக்கத்திக் கொண்டு கிடந்தேன்.

நீங்கள் போங்கம்மா'' என்று சொல்லி என்னை எழுப்பி போகச் சொன்னான். நான் உசும்பவில்லை. ஒருவரைச் சொல்லி அவரிடம் போய் கடிதமொன்று எடுத்து வரும்படி கூறினான்.

அவரைத் தேடி வயல்காடு எல்லாம் அலைந்தேன். எப்படி கஷ்டப்பட்டு என்றாலும் எங்களுடைய பிள்ளையை எடுத்து வரு வோம் என்று எண்ணி அலைந்தோம். கொஞ்ச நாட்களுக்கு பின்னர் அவரைக் கண்டு சொன்னேன்:

அன்றிலிருந்து என்னுடைய பிள் ளையை எப்படியாகுதல் வெளியில் எடுத்து விடுவோம் என்று எண்ணி கஷ்டம், களைப்பு பாராமல் சோராமல் நான் நடந்தேன். ஒரு நாளில்லை, இரண்டு நாளில்லை 15 நாட்க ளுக்கு நடந்தேன். பிள்ளை கிடைக்க வில்லை. நடந்து நடந்து சலித்துப் போய் அங்கு போவதையும் நிறுத்திவிட்டேன். ஆனால் என்னுடைய பிள்ளை என்னிடம் இல்லையே என்ற வேதனையை, அந்தத் துயரை என்னால் நிறுத்த முடியாமல் இருக்கிறது... என்னுடைய பிள்ளையை நான் எப்படியாவது திரும்பப் பெறவேண்டும். 7 மாதங்கள் கடந்தும் மகனுக்காக பரமேஸ்வரி அழுகிறாள். யுத்தத்தின் பின்ன ரான சமாதானச் சூழல் எல்லாம் வந்தன. ஆனால் பரமேஸ்வரிக்கு தன் மகன் வரவில்லை.

இன்றைக்கு சரியான காய்ச்சல் இளை யவனுக்கு (கடைசிப் பையன்) கையில் காசில்லை. டாக்டரிடம் காட்ட ரூபா.100/- வேண்டும் ஒரு தரம் மருந்து எடுப்பதற்கு. நமக்குச் சாப்பிடுவதற்கே இல்லை இதற்குள் நோயும் வந்தால் என்ன செய்வது?

"தங்கச்சிக்காறி பனடோல் தந்தா, இன்னொருத்தி நெல்லுத் தந்தா, நமது பிள்ளை இருந்தால் இந்நேரம் அண்டைக் கன்று கையில காசு, முத்திரைக்கு வரும் அரிசி, கறியையும் வாங்கி எதுவென்றாலும் மிஞ்சும்.''

யோசித்து யோசித்து ஒரே பயம். உடம்பில் நடுக்கம். இரவில் ஒரே யோசனை. நித்திரை இல்லை. அத்தோடு இந்த மழைக்கு மரத்திலே இருந்த எறும்புக் கத்தைகள் கலைந்து விழுந்து வீடெல்லாம் பரவத் தொடங்குகிறது. ஒரே கடி, ஒருவருக்கும் நித்திரையில்லை. இப்படியே நமது பொழுது போனால் இந்த வாழ்க்கையின் நோக்கம்

என்ன? ஒன்றுமே புரியவில்லை. நமது பிள்ளையுமில்லை...... புருஷனுமில்லை. பரமேஸ்வரியின் கண்ணீரோடு காலங்கள் கடக்கின்றன. பரமேஸ்வரியின் ஆறுதல் மருந்து எது? எவை? அது எங்கிருக்கிறது? அதனைத் தருவது யார்?

"என்னதான் வேலையைச் செய்து நமது ஆட்களின் வாசலில் போயிருந்து கதைத்து வேலை செய்து கவனத்தைத் திருப்பினாலும் நமது வாசலுக்கு வந்தால் நமது பிள்ளை இல்லையே என்ற ஏக்கத்திலேதான் எல்லாமே முடிகிறது." பரமேஸ்வரியின் கவலை அவளது சகோதரிகளுக்கு பழகிவிட்டது. பரமேஸ்வரியின் வாழ்க்கையை ஓட்ட நம்பிக்கையிருந்து தனக்கு மகன் இருக்கிறான், உழைப்பான், பணம் வரும், வாழ்க்கையை கொண்டு தள்ளலாம் என்ற தென்பும் இருந்தது. அந்த நம்பிக்கையில், அந்தத் தெம்பில்தான் அத்தனை பிள்ளைகளையும் வளர்த்தெடுத்தாள். 'நாளை'களில் நம்பிக்கை வைத்துத்தானே வாழ்வு நகர்கின்றது. இன்று அந்தத் தென்பு இல்லை. இன்று அந்த தென்பைத் தந்த மகனுமில்லை.

வாழ்வு.....................?

"இவள் தங்கச்சி மகன் விநாயகத்தோடு ஒத்தவன். அம்மா என்று அவனுடைய தாயைக் கூப்பிடும்பொழுதெல்லாம் எனக்கு விநாயகம் வந்து நின்று கூப்பிடுவது மாதிரியே இருக்கும். சில நேரம் வேலையில் மூழ்கி மறந்து போகும்போது இவனைப் போல் யாராவது வந்து கூப்பிட்டால் என்னுடைய விநாயகம் வந்து நின்று கூப்பிடுவது போல்...... ஓடி வந்து பார்ப்பேன். பிறகு தான் தெரியும் நமது பிள்ளை இல்லை...... அவனும் இங்கு இல்லை...... என்று."

வாழ்வில் குறிப்பாக ஏழைத் தாய்மார்களின் கனவுகளுக்கு இதுதான் விதியா?

"என்னுடைய பிள்ளை விருப்பத்துடன் போயிருந்தானென்றால் கவலையில்லை. ஆனால் வேலைக்கு என்று கூட்டிக்கொண்டு போய் ரெயினிங் கொடுப்பது வேதனையில்லையா?" எனக் கேட்டுத் தவிக்கும் பரமேஸவரிக்கு என்ன பதில் கூறுவது? யார் கூறுவது?

அருகில் மட்டக்களப்பு வாவியின் ஒரு பகுதி அலையெழுப்பி அழகாய்த் தெரிகின்றது. குளிர்ந்த காற்று, அங்கே நெருங்கி சடைத்த முதிரை மரங்கள். சூழலின் கதகதப்பு நம்மை அங்கேயே தங்கச் சொல்லிவிடும். ஆனால் பரமேஸ்வரியின் ரணம் காற்றால், நீரால் ஆறாதது. அது மனிதனால் உண்டானது. அது மனிதனால் தீர்க்கப்பட வேண்டியது.

"என்னுடைய மூத்த மகன் நீட்டி நிமிர்ந்து படுக்கத்தக்கதாக ஒரு வீடு வேணும். நன்மையோ தீமையோ வந்தால் நாங்கள் இருக்க இடம் வேண்டும்தானே? ஒரு கிணறு, ஒரு கக்கூஸ் அது போதும் எனக்கு". "புடவை வேண்டும், நகை வேண்டும், பணம் வேண்டும் என்றெல்லாம் ஆசையில்லை. என்னுடைய மகன் இருந்தானென்றால் ஒரு நாள் கட்டாயம் என்னுடைய ஆசையை நிறைவேற்றி வைப்பான்".

பரமேஸ்வரியிடம் பெருமூச்சும், பின்னர் நீண்ட மௌனமும் நீள்கிறது. நிசப்தமான இரைச்சல் இடைவெளிகளை நிரப்புகிறது. பரமேஸ்வரியிடம் நாம் விடைபெற முடியாது. பரமேஸ்வரியின் மகனைப் போன்ற ஓராயிரம் மகன்களுக்கும், பரமேஸ்வரிக்கும் இன்னும் விடை கிடைக்கவில்லை. விடையினையளிப்பவர்களை அவர்களின் கருணைகளைவிட, விடையாகிப் போயிருப்பது மனிதம், மனிதன். அதனை நாம் கவனத்திலெடுப்போமா?

■ ரி. உருத்திரா

## விடை தேடி

எனது மகன் எத்தனை தடவை
என்னைக் கேட்டான்
"அப்பா எப்போது வருவார்" என்று
அவனது மனம் நோகக் கூடா தென்று
பொய்ப் பூக்களைப் புனைந்து
ஏமாற்றி வருகின்றேன்.

அவனது வினாக் கணைகள் - எனது
செவியை மட்டுமல்ல
நெஞ்சத்தையும் துளைக்கின்றன.
நான் யாரிடம் வினவுவேன்
எனது கணவன் எங்கே?

தபாற்காரன் தகவல் தருவானா
வானொலிச் செய்தி வருத்தம் தீர்க்குமா
பத்திரிகை பதட்டம் தணிக்குமா
தொலைந்த குரல் தொலைபேசி எடுக்குமா
ஆழியின் அலையென
ஆயிரம் வினாக்கள் என்னுள்

தாலியை முத்தமிட்டு
தாகம் தீர்க்கின்றேன்
நெற்றிக் குங்குமம் நிலைக்க வேண்டுகிறேன்
பள்ளி செல்லும் மாணவரின்
வெள்ளை ஆடையைக்கூட வெறுக்கின்றேன்
வாடா மலர்களை வாஞ்சையுடன்
சூடுகிறேன் - இருந்தும்
நம்பிக்கை வேர்களை பிடுங்கும் புயலாக
என்னுள் எழும் வினா
நான் சுமங்கலியா?

**தம்பிலுவில் ஜெகா**

## மட்டக்களப்பின் சில சுவாரசியங்கள் ...



இன்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு மேல் வரலாற்றுப் பூர்வீகங் கொண்ட கிழக்கு மாகாணத்தின் தலைநகராக திகழ்கின்ற மீன்பாடும் தேநாடு என வர்ணிக்கப்படும் பிரதேசமே மட்டக்களப்பாகும். இன்றுவரை மட்டக்களப்பு என இப்பிரதேசம் பெயர் பெற்றமைக்கான சரியான காரணம் தெரியவில்லை. கல்மலைகளை வெட்டிச் சமப்படுத்தி மட்டமாக்கப்பட்ட பிரதேசத்தில் மக்கள் குடியேறியதால் இப்பெயரைப் பெற்றதெனவும் கிழக்குக் கரையோரம் முழுவதும் வயல் நிலமும் தென்னந் தோட்டமும் ஏரியும் கொண்ட ஆழமற்ற களப்பு நிலமாயும் தேங்காய்களும் மட்டைகளும் மண்டிக் கிடந்ததால் மட்டையும் களப்பும் சேர்ந்து 'மட்டக்களப்பு' ஆயிற்று என்றும் கூறுவர். இப்பெயர் பெறக் காரணமாயிருந்த பிரதேசத்தையே நாம் தற்போது 'புளியந்தீவு' என்றழைக்கின்றோம் எனவும் நம்பப்படுகின்றது. இவ்விடம் அப்பெயர் பெற்றமைக்கும் ஓர் கதையுண்டு, புலியன் என்பவன் இவ்விடத்திலிருந்து ஆட்சி செய்தமையினாலேயே இப்பிரதேசம் அவன் பெயர் கொண்டது என்றும் கூறப்படுகின்றது. இவனைச் சிலர் வேடுவத்தலைவன் என்றும் சிலர் திமிலர்களின் தலைவன் என்றும் கூறுவர். திமிலர்கள் இயக்கர்களின் வழிவந்தவர்கள் என்பது சிலரது கூற்றாகும். திமிலர்கள் 'திமிலதீவில்' வசிக்கின்றார்கள். 'திமில்' என்பது கட்டுமரம். கட்டுமரம் ஓட்டுபவர்களையே திமிலர்கள் என அழைத்திருக்கலாம்.



மக்களிடையே அதீத சாதிப் பாகுபாடுகள் எப்போதும் இருந்ததில்லை. இப்பகுதியில் வாழ்ந்த மக்களை மூன்று 'ஆள்களாகப்' பிரிப்பர். ஒன்று பூமியை மையமாக வைத்துத் தொழில் புரிந்த 18 பிரிவினரையும் "வெள்ளாளர்" எனவும், கடலையும் கடலை அண்டிய பகுதியில் வாழ்ந்து தொழில் புரிந்த மக்களை "கரை யாரர்கள்" என்றும். கைத்தொழில் செய்த மக்களை "கம்மாளர்" எனவும் அழைப்பர்.

மட்டக்களப்பிற்கு அணிசேர்ப்பதே அங்கமைந் துள்ள இயற்கை வாவிகள்தான். சுமார் 30 மைல் நீளமான இவ்வாவி 27,527 ஏக்கர் பரப்பினைக் கொண்டது. இவ்வாவி கடலில் இருந்து ஏறக்குறைய 20 மைல் வரை உவர் நீரையும் ஏனைய பகுதிகளில் நன்னீரையும் கொண்டது. உவர் நீர்ப் பகுதியில் மீன் பிடியும் நன்னீர்ப் பகுதியில் விவசாயமும் இடம் பெறுவதால் மக்கள் வாழ்க்கைக்கு இது இன்றியமையாததாக உள்ளது. மட்டுநகர் வாவியில் எருமைத் தீவு, காக்காய்த் தீவு, கரையாக்கான் தீவு, மாந்தீவு எனப் பல தீவுகளுண்டு. மாந்தீவுக்கென்றே தனியொரு வரலாறும் உண்டு. 1915 ஆம் ஆண்டளவில் பிரான்ஸிஸ்கன் சபைத் துறவி களால் இத் தீவில் தொழுநோய் வைத்திய சாலை கட்டி நோயாளிகளைப் பராமரித்து வந்தனர். பண்டாரநாயக்காவின் ஆட்சியின் போது வெளிநாட்டவர் வரத் தடையேற்பட்ட தும் இவ் வைத்தியசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது. இதைச் சுற்றியிருந்த இம் மாந்தீவு வாவி மிகவும் ஆழமானதால் இவ் வைத்தியசாலைக்கு வள்ளத்தில் வந்த ஏழு பேர் இவ்வாற்றில் மாண்டுபோகவே "ஏழு தாலி அறுத்த கடல்" எனவும் மக்களால் அழைக்கப்படுகின்றது.



இங்குள்ள மக்கள் வாழ்க்கை நடத்த பல வளங்களும், வழிகளும் சூழவுள்ளது. பண்டைய காலங்களில் செல்வம் கொழிக்க வாழவேண்டும் என்ற நிலைப்பாடு பெரும் பாலானோரிடம் இருக்கவில்லை. ஆனாலும் பெரும் போடிமாராகவும், தோட்டக்காரரா கவும் இருந்து பணத்தில் புரண்டவரும் உண்டு. பெரும்பாலும் இவ்வாறானோரே செல்வச் செழிப்புடன் இருந்துள்ளனர். வயல்களில் அருவிவெட்டி முடிந்தால் வயற் சொந்தக்காரருக்கு மட்டுமல்ல கதிர் பொறுக் குவோருக்கும், கூலிக்காரருக்கும், வியாபாரி களுக்கும், பட்சி சாலங்களுக்கும் ஒரே மகிழ்ச்சி. போடியார் வருடம் ஒருமுறை கடுக்கன், குடை, கொண்டை சகிதம் பட்டணம் வருவாராம் (உடுபுடவை, சாரா யம் வாங்க) பின்னால் முல்லைக்காரன், காவல்காரன், இனசனம் என ஒரு பட்டாளமே தொடர இடைக்கிடையே தெருவில் நின்று புதினம் பார்த்துக் கொண்டே செல்வார் களாம். இதனாலேயே "பட்டிக்காட்டான் பட்டணம் பார்த்தது போல" எனுந்தொடர் வழக்கில் வந்ததாகவும் கூறுவர்.

மட்டக்களப்பிற்கென்றே உரித்தான பேச்சு வழக்குமொழியானது குத்தலுங் கிண்டலும்



உள்ளடங்க கேட்பதற்கு மிகச்சுவாரசியமாக இருக்கும். சுவாமி விபுலாநந்த அடிகளார் பாடியது போல "ஆடவர் தோளிலும் கா, அரிவையர் நாவிலுங் கா", கா என்னும் அசை சேர்த்து பெண்கள் கதைப்பர். கேட்க இனிமையாகத் தான் இருக்கும். ஆண்கள் மாலையில் பொழுது போக்கிற்காக கூடியி ருந்து கதைப்பர், சீட்டாடுவர், கூத்தும் ஆடுவர். அக்காலத்தில் கல்வியைப் பற்றி கனவு கூடக் காணாத மக்களும் தமிழ் நன்றாக் பேசுவர். 1838 இல் பெண்களுக்கான கல்வி வித்திடப பட்டது. வீட்டுப் பாடசாலைகளாக ஆரம் பித்து பின்னர் 1849 இல் மிஷன் பாடசாலை களாக மாற்றப்பட்டது. 1933 இல் சுவாமி விபுலாநந்தர் அவர்களால் ஆங்காங்கே தமிழ் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும் அக் காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கென்று எவ்வித மதிப்பும் இருக்க வில்லை. இவர்களை நாகரிகமும் பண்பாடும் குறைந்தவர்களாவே கருதினர். ஏனெனில் இவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்பட்டதுடன், கிராமப்புறத்தில் இருந்தோரே பெரும்பாலும் ஆசிரிய கலாசாலையில் பயிற்றுவிக்கப்பட்டு வெளி யேற்றப்பட்டனர். இதனால் உபாத்தியாயர், ஆசிரியர் என்ற பெயர் மறைந்து "வாத்தி" என்றெல்லாம் அழைக்கத் தொடங்கினர். "வயித்துக்கு இல்லாதவன் வாத்தி" என்றும் அடங்காத தன் மகளுக்கு பெற்றார் ஏசும் போது, "இருந்து பார்ரீ உன்ன தமிழ் வாத்திக்குத் தான் கட்டிக்குடுப்பன் டீ" என்றும் கூறுவர். இவை ஒருபுறமிருக்க மட்டக்களப்புச் செந்தமிழை பழந்தமிழ் என்றும் கூறுவர் ("உயிர்த் துடிப்புள்ள ஆதித் தமிழ்").

எவ்வாறு மட்டக்களப்பிற்கென்றேயான பேச்சு வழக்கு உள்ளதோ அதே போன்று சில பாரம்பரிய பொருட்களும் உண்டு. உதார ணமாக, போயாக் கட்டை, கரப்பு, தும்பை, உமல் (இதனை மணியத்தார் பேர்ஸ் என்றும் கூறுவர்).... எனக் கூறிக்கொண்டே செல்லலாம். இன்றும் இவ்வாறான சில பொருட்கள் மக்கள் புழக்கத்தில் உள்ளது. மட்டக்களப்பு அருங்காட்சியகத்தில் வழக் கொழிந்து போன இவ்வாறான பல பொருட் கள் உண்டு. அதுமட்டுமன்றி ஏட்டுப் பிரதிகள், இந்து சமயச் சிற்பங்கள், தமிழ், இஸ்லாமிய கலாச்சாரப் பொருட்கள் மற்றும் பிரித்தானிய ஆட்சிக் காலத்துப் பொருட்கள் எனப் பலவுண்டு.

இவை மட்டக்களப்பு பற்றிய மிகக் குறுகிய தகவல்களே, இப்படியான பல சுவாரசியங் களை அடுக்கிக் கொண்டே செல்லலாம். எம் நாட்டிலேயே பல ஊர்களுக்குப் பல் வேறு வகையான வரலாற்றுப் பின்னணியி ருப்பினும் இவ்வாறான சில பிரதேசங்களே சுவாரசியமானதும் வேடிக்கையானதுமான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டுள்ளது. எப்படித்தான் முரண்பாடான வரலாற்றுப் பின்னணியிருப்பினும், அடுக்கிச் செல்ல முடியாத சுவாரசியங்கள் நிறைந்த மட்டக் களப்பிற்கென்று எப்போதும் தனியிடமுண்டு.

**N.V. மின்னொளி**

# சமாதான ஓவியத்தின் இன்றைய கோலம்



தேகத்தில் ஓடும் உதிரமே – நீ
நிலத்தில் ஓடுவதென்ன!.......
விண்ணுடன் காதல் மொழி பேசும்
மரங்களே - நீங்கள்
மண்ணை முத்தமிடுவதென்ன!......

ஆலயத்தில் ஒலிக்கின்ற மணிகளே – நீங்கள்
கல்லறையில் மௌனிப்பதென்ன!.........
சிறகைச் சிறகு விரிக்கின்ற,
புட்களே – நீங்கள்
கரையின் புழுதிகளை சுவாசிப்பது ஏன்!.........

தடம் மாறிய ரயில்களும்,
பாதை மாறிய பயணங்களும்,
மூச்சுக் குழல்களை அடைத்து
இதயத்தின் துடிப்பையே மாற்றிவிடும்!.........
மனிதர்களின் அறிவு,
விண்ணைத் தாண்டிச் சென்றாலும் கூட,
மனிதத்துவமும்,
சமாதானமும் - இன்று
குழந்தை தொலைத்த நாணயம் போல
மண்ணுக்குள் புதைந்தே விட்டது!..........

o செ. ரதி

கல்லுகளைப் போல் - எங்கள்
மனங்களும் நொறுங்குகின்றன — ஏன்
எங்களின் நொறுங்கிய உள்ளங்களின் சோகங்கள்
உங்களை நெருங்கவில்லை!........

மலையைப் போல — நல் உள்ளங்களை
அகமாகக் கொண்டதனால்தானோ, - எங்களுக்கு
'மலையக மக்கள்'— என்று
பெயர் வந்தது போலும்!........

# உரிமைக்காய்

ஆயிரமாயிரம் சோகங்கள் புதைந்து மூடிக்கிடக்கும்
குழி விழுந்த— எங்கள்
விழிகளைப் பார்த்த சில இதயங்கள்,
'குறிஞ்சிப் பரல்கள்' எழுதினாலும் கூட!.......
எம் உதிரத்தை
உறிஞ்சிக் கொண்டிருக்கிறான் கதிரவன்!.........

அவனுக்கென்ன!........ அவன்
தன் கடமையைக் தவறாமல் செய்து கொண்டிருக்கின்றான்,
ஆனால்!மனிதர்கள் ? -
முணுமுணுத்துக் கொள்ளும்
எங்கள் வறண்ட நாக்கு!.......

உடல் நடு நடுங்கும்!........
அடியில் கோடரி வைத்த மரம் போல,
செயலிழக்கும் இரு கரங்கள்!........
கண்மணி இருந்த இடம்
தெரியாமல் மேலோகம் செல்லும்!....

ராமனின் வில்லைப் போல
முதுகை வளைக்கும் கொழுந்துக்
கூடை ஒரு பக்கம்!......

அம் மயக்கத்திலும் கூட — எங்கோ

ஒரு மூலையில் எதிரொலிக்கும்,

கடைசி மகன் விச்சுவின் — தொனி இழந்த

குரலொலியும்!..........

குடும்ப சுமையை நெஞ்சிலும்,

கூடை சுமையை முதுகிலும் — சுமக்கும்

எங்களின் உக்கிரங்கள் — இன்னும்

புரியாத புதிர்களாக!...........

************

பனித்துளி மூக்குத்தித் தளைகளின் மேலே திரைபோடும்,

பனித் திரையை மிஞ்சி விட்டது —

விழித்திரையின் துளிகள்!..........

கானல் நீர் போல வளைந்தோடும்

ஏக்கங்கள்!...........

காற்றின் முகவரியைத் தேடும் விழிகள் போல

உரிமைகள்!.........

தேநீரில் இருப்பது எமது

உதிரத்தின் சாயம்!..........

நாங்கள் விரும்புவது கின்னஸ் சாதனையல்ல!......

கால் வயிற்றுக் கஞ்சியும்,

கல்வியும்,

உயிராய் மதிக்கும் —

உரிமையுந்தான்!........



o செ. ரதி



சிறுவர்களின் ஆற்றல்களைக் கொண்டாடுவோம் – மூத்த
மனிதரிடம் அனுபவங்கள் பெற்றுக் கொள்வோம்.
முத்தோர்கள் சிறியோர்கள் இரண்டு கண்களாம் – மனிதர்
மேன்மையுடன் வாழுமுலகின் இனிய வளங்களாம்.
(சிறுவர்களின்....)

மூத்தமனிதர்களின் அனுபவங்கள் ஒளிகாலட்டும் – சிறுவர்
வளர்ச்சிப் பயணத்தில் அதுவும் துணையாகட்டும்

ஏற்றுத்தாழ்வுகள் அகற்றி மனிதர்கள் நாங்கள் – எங்கும்
சூழலுடன் இணைந்து வளரும் வாழ்வை ஆக்குவோம்.
(சிறுவர்களின்....)

ஆண்களும் பெண்களும் சமத்துவமாக – வாழும்
சூழல்கள் எங்கெங்கும் உருவாக்குவோம்

கடந்த காலத்தில் பாடம் கற்றுக்கொள்வோம் – நாங்கள்
புதிய காலத்தைக் கணித்து ஆக்கிக் கொள்வோம்

**சி. ஜெயசங்கர்**

---

"புத்தம் புது பூமியிலே
பூத்துக் குலுங்கும் சிட்டுக்கள் - நாம்
வண்ண வண்ணக் கனவுதனை
கண்களில் ஏந்தி நிற்கிறோம்.....
இன்பமான வாழ்வுதனை எண்ணி–நாமும்
மகிழ்கின்றோம்!

எமது மனங்களில் இவ்வாறான குதூகல உணர்வுகள் என்றும் ஊற்றெடுத்துக் கொண்டே இருக்கும். நானும் ஒரு சிறார் என்பதால் எனது கனவுகள் எவை? எனது இலட்சியம் எது? என சிந்தித்துப் பார்க்கிறேன். மகிழ்வாக வாழ்தல் பற்றிய எனது கனவுகள் பல. அவற்றை உரிய முறையில் வெற்றி கொள்வதே எனது இலட்சியம்.

"எங்கள் நாட்டில்
எங்கள் ஊரில்
எங்கள் வீட்டில்
எங்கள் அம்மாவின்
எங்கள் அப்பாவின்

எங்கள் அப்பாவின்
எங்கள் பாட்டியின்
எங்கள் தாத்தாவின்
அரவணைப்பில், எப்போதும் நாம்.

சிரிப்பும், சின்னச் சின்ன தீண்டல்களும்... செல்லச் சண்டைகளும்... சமாதானங்களும்... மொத்தத்தில் குதூகலமான வீடு என்னுடையது. இந்தக் குதூகலமும், அன்பும் அரவணைப்பும் இன்றுபோல் என்றும் தொடர வேண்டும் என்பதே எனது கனவும் இலட்சியமும் ஆகும். என்னைப் போலவே இந்த உலகில் உள்ள அனைத்து சிறார்களும் தமது பெற்றோருடன் இணைந்து மகிழ்வாக வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

சிறந்த கல்வி – வளமான சமூகத்தை உருவாக்கும். எமது வளமான வாழ்வினை மென்மேலும் மெருகூட்டிக் கொள்ள கல்வி பெறுவது அவசியம். இன்று பல உலக நாடுகளில் கல்வியில் சமவாய்ப்பும், சம சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது. எமது இலங்கை திருநாட்டில் 05-14 வயது வரை கட்டாயக் கல்வித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி வாய்ப்புக்கள் திறந்துவிடப்பட்டுள்ளன. வெறுமனே ஏட்டுக்கல்வி மட்டுமன்றி, செயற்பாடுசார் தொழிற்கல்வியும் இன்று புகுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான கல்விச் சூழலினை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பது எமது கனவு.

இவ்வாறான உயர் இலட்சியத்தை அடைவதற்கு, பாடசாலைக் காலம் மிகவும் இனிமையானதாகவும் பசுமையானதாகவும் அமைய வேண்டும். ஆசிரியரின் காப்பும், கணிப்பும் என்னை எப்போதும் மகிழ்விக்கும். ஒவ்வொரு புதிய முயற்சியின் போதும் முதுகில் தட்டிக் கொடுக்கும் என் ஆசிரியர்களுக்கு என்றும் கீழ்ப்பணிவுள்ள மாணவராய் நடந்து கொள்வேன். என்னைப் பற்றிய வண்ணக் கனவுகளைச் சுமந்து நிற்கும் பெற்றோரினதும், ஆசிரியர்களினதும் ஆசைகளை நிறைவு செய்ய முயற்சி செய்வேன். எப்போதும் என்னை சுற்றியுள்ளவர்கள் என்மீது பிரியமுடன் இருக்க வேண்டும் என்பது எனது ஆசை. இதற்கு இசைவாக நானும் அவர்கள் மீது எப்போதும் பற்று பாசத்துடன் நடந்து கொள்வேன். பெரியோரை மதித்து நடத்தல், பிராணிகளிடத்தில் அன்பு செலுத்துதல், இளையவர்களை அன்புடன் வழி நடத்துதல் போன்ற பண்புகள் மூலம் எனது இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறேன்.

அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் நிறைந்த சூழல் நிலைக்க வேண்டும் எனில், நாட்டில், என்றும் சமாதானச் சூழல் நிலவ வேண்டும். கடந்த காலங்களில் நாடு பூராகவும் ஆங்காங்கே இடம்பெற்ற யுத்தத்தினால், பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் எம்மைப்போன்ற சிறார்கள் தான். சிறுவர்கள் தாய் தந்தையரை இழந்து, அநாதரவாக தெருவில் நிற்க வேண்டிய நிலை எதனால் ஏற்படுகிறது? யுத்தத்தினால்.

யுத்தம் இன்று ஓய்ந்துவிட்ட நிலையில் அதன் எச்சங்களாக...... நினைவலைகளாக எத்தனை சிறார்கள் அநாதை விடுதிகளில் தங்கியுள்ளார்கள். உணவு, உடை, உறையுள், உறவுகள்... என சகலத்தையும் இழக்க வைக்கும் கொடிய யுத்தம் இனியும் வேண்டாம். சமாதானமான...... சந்தோசமான...... வாழ்க்கையே எனது கனவு. சிறுவர்களாகிய நாம் பேதங்களை எமக்குள் விதைக்காமல், எதிர்காலத்தில் ஒற்றுமையாக வாழ வேண்டும்.

சிறுவர்களது உரிமைகள் எவை என அறிந்து கொண்டு, அதன் வழி செயற்படுவது எனது கனவுகளில் ஒன்று. அந்த வகையில் எனது கருத்துக்களை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும் ஆசை கொள்கிறேன். இதற்கு எனது பெற்றோரும் துணை நிற்கிறார்கள்.

வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கிறார்கள். சில வீடுகளில் தாய், தந்தையர் இருவருமே வேலை செய்யும் பட்சத்தில், அவர்களின் பிள்ளைகளின் பாடு பெரும் திண்டாட்டத்தில் முடிந்து விடுகிறது. பெற்றோர் வேலைத் தளத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை மனதில் தாங்கிக்கொண்டு, பல மன நெருக் கடிகளுடன் வீட்டிற்கு வருவார்கள். மறு நாளையச் சமையல், வீட்டு வேலைகள் போன்றவற்றை கவனிப்பதற்கே அவர்களுக்கு நேரம் இருக்காது. இதன் மத்தியில் பிள்ளை களை அன்புடன் கவனிப்பது கடினமாகி விடும். இவ்வாறான வீட்டுச் சூழலில் வளரும் எனது நண்பர் நண்பிகள் மன ஏக்கங்க ளுடனேயே வளர்வார்கள்.

அதுமட்டுமன்றி சில குடும்பங்களில் பெற்றோர்கள் ஒற்றுமையின்றி, எப்போதும் சண்டையும் சச்சரவுமாக காணப்படுவார்கள். பெரியவர்களின் சண்டைகளினால் கடுமை யாகப் பாதிக்கப்படுவது என்னைப் போன்ற சிறுவர்கள்தான் என்பதை அவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை. சில பெற்றோர்களின் நீண்ட சண்டைகள் விவாகரத்தில் முடிந்து விடும். இதனால், பிள்ளைகள் தாயுடன் கொஞ்ச நாட்கள், தந்தையுடன் கொஞ்ச நாட்கள் என அல்லாட நேரிடும். அவர்க ளின் உடல், உளம் மட்டுமன்றி எதிர்கால வாழ்வே பாதிப்படையும்.

இவற்றைவிட மோசமான ஒரு நிலையும் சில குடும்பங்களில் நிலவுவது உண்டு. மது போதைக்கு அடிமையான தந்தையைக் கொண்ட குடும்பங்களில் சிறார்கள் மனம் உடைந்து போகிறார்கள் என்பதை யாவரும் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. குடிகாரத் தந்தையின் கைகளினால் அடி வாங்கியே வீட்டை வெறுப்பவர்களும் இருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தந்தையைப் பார்த்துப் பார்த்தே தாமும் குடிக்க கற்றுக் கொள்கி றார்கள். மதுசாரம் வாங்கி வருவதற்கு சில தந்தைமார் தமது பிள்ளையையே அனுப்பு கிறார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் என்னைப் போன்ற பிஞ்சு உள்ளங்கள் எவ்வளவு துன்பப்படுவார்கள், துஷ்பிரயோகப் படுத்தப்படுவார்கள் என்பதை யாருமே உணர்வதில்லை. இவ்வாறான சிக்கல்கள் நிறைந்த குடும்பங்களில் சிறார்கள் தமது பேச்சுச் சுதந்திரத்தை இழக்க நேரிடுகிறது. சிறுவர்களாகிய நாம், எமது எண்ணங்களை கருத்துக்களை வெளிப்படுத்த முடியவில்லை என்றால் என்ன செய்வது? தினம் தினம் புதுப்புதுக் கனவுகளுடனும் தேடல்களுடனும் உலாவரும் எம்மை... எமது ஆசைகளை கட்டிப்போடச் செய்வது எந்த விதத்தில் நியாயமானது?

நன்மை தீமை அறியாத பருவம் எம்முடைய சிறுவர் பருவம். இந்தப் பருவத்தில் எம்மை அரவணைத்து நடத்தவேண்டிய பெரிய வர்கள் தமது பாலியல் இச்சைகளுக்கு எம்மைப் பயன்படுத்த முயல்வது ஜீரணிக்க முடியாத விடயமாக உள்ளது. எத்தனை குடும்பங்களில் பெற்றோர், உறவினரே தமது பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வதைக் கேள்விப்படுகிறோம். ஈவிரக்க மற்ற இந்தச் செயல்களில் பாதிக்கப்படப் போவது யார்?

பாலியல் துஷ்பிரயோகத்தைப் போன்று, இன்று சிறுபிள்ளைகளை பணத்திற்காக கடத்தும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. முகம் அறியாத நபர்கள் மட்டுமன்றி, குடும்பங்களுடன் பழகி உறவாகும் உறவினர்... குடும்ப நண்பர்கள் கூட சிறார்களை கடத்தி வைத்து விட்டு, பெற்றோரிடம் கப்பம் கோருகின்றனர். கேட்ட பணம் கிடைக் கத் தாமதிக்கும் பட்சத்தில் பிள்ளைகளை கொலையும் செய்து விடுகின்றனர். இப்படி யான கொடுமையான செயல்களினால் எத்தனை நண்பர்களை இழந்திருக்கின்றேன் தெரியுமா? இவ்வாறான கடத்தல் சம்பவங்க ளினால் அச்சமடைந்த எனது பெற்றோர், சிறிது காலம் என்னை மற்றவர்களுடன் வெளியில் அனுப்பவே அனுமதிப்பதில்லை. இன்று வரை கூட எனக்குள் பயம் இருக்கத்


தான் செய்கிறது. இவ்வாறாக கடத்தல் தொடர்பான பயங்கள் எதுவும் இன்றி சுதந்திரமாக நான் உலாவ வேண்டும் என்பதே எனது கனவுகளில் ஒன்றாகும்.

உடல் உள நிலைமைகள் சீராக இருக்கும் போதே, சிறாராகிய எமக்கு எவ்வளவு தீங்குகள் இழைக்கப்படுகின்றன. நிலைமை இப்படி இருக்கையில் விசேட தேவைகள் கொண்ட எனது நண்பர்களின் நிலை எப்படி இருக்கும்? எண்ணிப்பார்க்கவே பயமாக இருக்கிறது. விசேட தேவை உடைய நண்பர்களை நாம் ஒருபோதும் ஒதுக்கி வைக்கக்கூடாது. அவர்களும் எம்மைப் போன்ற தேவைகளும் ஆசைகளும் கொண்டவர்களே. நான் மாதம் ஒரு தடவை மட்டக்களப்பில் இருக்கும் தரிசனத்திற்கும், ஓசானம் இல்லத்திற்கும், எனது பெற்றோரு டன் சென்று வருவது வழக்கம். இவ்வாறான விசேட தேவை உடைய எனது நண்ப நண்பிகளை மதித்து நடத்தலும், அவர்களு டன் நட்பைப் பகிர்ந்து கொள்வதும் எனது விருப்பிற்குரிய செயல்களாகும். சாதாரண பிள்ளைகளைப் போன்று, அவர்களாலும் திறமைகளை வெளிக்காட்ட முடியும் என்பதை இந்த உலகம் அறிந்து கொள்ள வேண்டும். உலக நாடுகள் எங்கும் யுத்தம் என்பது சாதாரண ஒரு விடயமாக போய்விட்ட இன்றைய சூழ்நிலையில் என்னைப்போன்ற பல சிறார்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். இலங்கையில் இதன் எச்சங்க ளாகவே சிறுவர் புனர்வாழ்வு நிலையங்கள் இயங்கி வருகின்றன. யுத்தத்தின் கோரப்பிடி யில் சிக்குண்டு சாவது மட்டுமன்றி, முதிராத பருவத்தில் ஆயுதப் போராட்டங்களில் இணைந்து எமது வாழ்வை சீரழிப்பது எந்த விதத்தில் நியாயமானது. எனவே உலகெங் கும் வாழ்கின்ற சிறுவர்கள் யுத்த நடவடிக் கைகளில் ஈடுபடுத்தப்படாமல், எம்மைப் போன்ற வயதிற்கேற்ற கல்வியைப் பெற்று சுதந்திரமாக வாழவேண்டும்.

சிறுவயது முதல் சமசந்தர்ப்பம், சமவாய்ப்புப் பற்றிச் சொல்லித்தரும் பெரியவர்கள் சிலர், சில நேரங்களில் பெரியவர்களாக நடந்து கொள்வதில்லை. ஆண் குழந்தை என்றால் அதிக சவால்களும், பெண் குழந்தை என்றால் அக்கறையற்ற தன்மையினையும் வெளிப் படுத்துகின்றனர். எனது வீட்டில் என்னைப் போலவேதான் எனது தங்கையும் பெற்றோ ரால் பாசம் பாராட்டப்படுகிறாள். இவ்வாறே சகல வீடுகளிலும் ஆண் குழந்தை, பெண் குழந்தை என்ற பேதம் இன்றி, சமனான கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டும்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவனா வதும் தீயவனாவதும் பெற்றோர் வளர்ப்பி னிலே” ஆம் எமது உரிமைகளை நியாய மான முறையில் பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதுதான் எனது கனவு. அதேவேளை எமது சுதந்திரங்களை நாம் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. இன்றைய நவீன யுகத்தில் கணனி, வலையமைப்பு, பேஸ்புக் முறை என பல தொடர்புகளி னாலும், செல்லிடத் தொலைபேசிப் பாவனை களாலும் எனது நண்ப நண்பிகள் திசை திருப்பப்படுகிறார்கள். இன்டர்நெட் மூலம் முறைகேடான படங்கள், முறைகேடான தொடர்புகள் கிடைக்கின்றன. தொலைபேசிப் பாவனை கல்வியைக் கொலை செய்கிறது. எனவேதான் சிறுவராகிய எமக்கு எவை யெவை தேவை என்பதை உணர்ந்து அன்பாகவும் கண்டிப்பாகவும் எமது பெற்றோர்கள் எமை வளர்க்க வேண்டும். அப்போதுதான் எமது வாழ்வு சிறப்படையும்.

மொத்தத்தில் மகிழ்வான சூழலில் பெற்றோ ருடன் கூடி வாழும் வாழ்க்கையே எனது கனவாகும். என்னைப் போன்றே எனது நண்ப நண்பிகளும் எப்போதும் மகிழ்வாக வாழ வேண்டும்.



● சுதாகினி டெஸ்மன் நாகல்

# மனித வாந்திகள்

வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. காலையில் இருந்து தலைசுற்றல் வேறு. நெஞ்சு தீப்பிடித்து எரிவதான பிரம்மை. எது நடந்துவிடும் என்று பயந்தாளோ அது நடந்து விட்டதாக உணர்ந்தாள் பானு. ஓவென்று வாந்தி வந்து விழுந்தது. அவள் வாந்தி எடுத்த ஆரவாரத்தில் மாமி ஓடி வந்து நின்றாள்.

"என்னடி விடியக்காலையில் வாந்தி எடுக்கிற. மசக்கக்காரி மாதிரி... கண்ட தையும் திண்டா இப்படித்தான். எழும்பி உள்ள வா" வழமையயான வசைப்பாடலு டன் உள்ளே அழைத்துச் சென்றாள் மாமி. பானு தாய்க்கு ஒரே பிள்ளை. விபத்தொன்றில் பெற்றோரை இழந்து தாய் மாமனிடம் தஞ்சமடைய வேண்டிய தாயிற்று. இவளுக்கிருந்த போதுமான சொத்துக்கள் மாமியை ஆதரிக்க வைத்தன. மாமா வீட்டில் தஞ்சமடைந்து நான்கு வருடங்களாகின்றன. பானுவுக்கு இப்போது பத்தொன்பது வயது. அண்மைக்காலமாக, மாமனின் பாலியல் அட்டகாசங்கள் படிப்படியாக அதிகரித்தது, சில மாதங்களுக்கு முன் அத்துமீறியிருந்தது. ஒரு தடவையல்ல மூன்று தடவைகள் அவள் அவனது பாலியல் பலாத்காரத்திற்குட்பட்டாள். பானு மூன்று தடவைகளும் செத்து விட்டாள். அவளைப் பொறுத்தவரை மாமனும் ஒரு வாந்திதான். ஆனால் வெளியே எடுக்க முடியாத வாந்தி. வெளியே வந்தால்தானே சற்று நெஞ்சு லேசாக இருக்கும்.

மாமனின் சேட்டைகளை மாமியிடம் சாடையாக சொல்லியிருக்கிறாள். "நீ தமுக்கி குலுக்கிக்கிட்டு நிண்டா எந்த ஆம்புளதான் ஆசப்படமாட்டான்" என வார்த்தைகளால் வாந்தி எடுத்தாள் மாமி. ஒருதரம் மாமன் உத்தமன் போல தாம் தூம் எனக் குதித்தான். பானுவை வீட்டிலி ருந்து வெளியேற்ற வேண்டுமென சீறினான். அது பானுவுக்கே சொந்தமான வீடு என்பதால் அவளை மன்னித்து ஏற்றுக்கொள்வதாக சமாதானமானான். அதன் பின்பும் ஒரு தடவை இவளிடம் தவறாக நடந்து கொண்டான். அவனது அயோக்கியத்தனத்தை வெளியே சொன்னால் பானு அவளது காதலனுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை ஆதாரம் காட்டி அவன் தலையில் பழியைப் போட்டு விடுவதாக அச்சுறுத்தினான்.

மாமியிடம் சொன்னால் மட்டும் நம்பவா போகிறாள். தலைவிதி என்று வாழவிருந்தாள். மீண்டும் குமட்டிக் கொண்டு வர வெளியே ஓடி வாந்தி எடுத்தாள். நிமிர்ந்த போது அவன் முன்னால் மாமனும் அருகே மாமியும் நின்றிருந்தனர். மாமனின் முகம் பேயறைந்தது போலிருந்தது. பானு எதையாவது உளறி விடுவாளோ என்று தூக்கி வளர்த்த மாமன் அவசரப்பட்டான்.

"ஏன்டி வாந்தி எடுக்கிற எவனுக்கு முந்தான விரிச்ச?" அவனும் வார்த்தைகளால் வாந்தி எடுத்தான்.

"என்னங்க உங்க மருமகள ஏன் இப்படி அவமானப் படுத்துறீங்க"

"உனக்கு என்னடி தெரியும்? அவள் எவனுக்கோ உண்டாகி யிருக்காள். பிறகு பழிய என்ட தலையில போட்டாலும் போடுவாடி நீ அப்பாவி நம்பிடுவாய்."

"வாந்தி எடுக்கிற கர்ப்பத்துக்கு



"இவள் மூஞ் சியப் பாரு எழுதி ஒட்டியிருக்கே"

"பானு உண்மையை சொல்லம்மா" என கரந்தாள் மாமி

பானு" ஆ" என்பதற்கு அடையாளமாக தலையை மேலும் கீழும் அசைத்தாள்.

"உன் கர்ப்பத்திற்கு யாரு பானு காரணம். அறியாம எம் புருசன் மேல பழிய போட்டிறாத பானு" அழுதாள் மாமி.

"எப்படி மாமி பொய் சொல்லுறது மாமவத்தானே கை காட்ட வேண்டியிருக்கி. எத்தின தடவை உங்கட்ட சொன்னன். என்ன நம்பாம நீங்களும் சேர்ந்து என் வாழ்வை அழிச்சிட்டீங்களே மாமி" என பானுவும் அழுதாள்.

மாமனோ ரௌத்திரமானான்.

"இந்த நாய அடிச்சே சாக வெக்கனும்" என உறுமியவாறு அவளது தலைமுடியைக் கையால் பற்றிக் கொண்டான். அவள் வலிதாங்க முடியாமல் முனகினாள்.

மாமி கையில் அகப்பட்ட மண் வெட்டியைய் தூக்கிக் கொண்டாள். "டேய் நாசமாய் போறவனே. துரோகி விடுடா அவள......" எனக்கு உண்மை தெரிஞ்சி போச்சி. அவள விடுறியா மண்டையில ஓங்கிப் போடயா" அவள் கூச்சலில் அயலவர்கள் கூடியிருந்தனர்.



"உனக்கு பைத்தியமா ராஜி. இந்த நடத்த கெட்டவள்" அவன் முடிவுக்கு முன் மாமி சீறினாள்.

"அடே நாசமறுவாய், வாழ வேண்டிய இந்தக் கன்னிப் பிள்ளட வாழ்வ சூறையாடிட்டு..... பழிய எங்கயோ போட்டுத்து நல்லா இரிப்பியா"

"ஓம் ஓண்டி. நான் தான் அவ கர்ப்பத்திற்குக் காரணம் இப்ப என்ன? நான் அவளையும் வெச்சி நடத்தப்போறன்"

மாமியும் மருமகளும் திடுக்கிட்டனர். தன் சுயரூபத்தை காட்டிவிட்டு அவன் நகர்ந்தான். பானுவின் கதையை ஊர் வாந்தியெடுத்தது. உறவினர் ஊதி எரியவிட்டனர். இறுதியில் ஊர்ப் பெரியார்கள் என்ற பெயரில் ஆண்கள் கூடி முடிவு கண்டனர். பானுவை நாசம் செய்தவனுக்கே கட்டிவைப்பதாக தீர்ப்பு வழங்கினர். இதில் குற்றவாளிக்கு தண்டனை கிடைக்கவில்லை என மாமி வாதாடினாள். நிரபராதி தண்டிக்கப்படுவதாக பானு அலறினாள். அவன் குற்றமாக இழைத்ததை சட்டரீதியாக்கி, சாதகமாக்கி கொடுத்தனர்.

ஒரு நாள் காலை வெகு நேரமாகியும் பானுவின் கதவு திறக்கவில்லை. மாமனும் அன்று அங்கேதான் தங்கினான். மாமிக்கு எரிச்சலாக இருந்தது.

"நாசமாய் போறவ, கேடு கெட்டவ, சீரழிச்சவன சேர்த்து வெச்சிட்டிருக்கா".

கதவைத் தட்டினாள் திறக்கவில்லை. அயலவர் வந்து உடைத்து உள் புகுந்தனர். மாமன் கட்டிலிலும் பானு தரையிலும் கைகால்களைப் பரப்பியபடி கிடந்தனர். மின் விசிறியின் காற்றுக்கு பானுவின் கையிலிருந்து ஒரு காகிதம் படபடத்தது.

என் அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய மாமி.

இங்கே இறந்து கிடப்பது நானல்ல. என் கூடுதான். நான் என்றோ செத்து விட்டேன். ஒரு வாந்தி என்னை வாந்தி எடுக்க செய்ததை என்னால் ஜீரனிக்க முடியவில்லை. ஊரவர் கூடி எனக்கே தண்டனையைத் தந்தனர். இங்கே குற்றவாளிக்கு சாதகமாகன அங்கீகாரமே கிடைத்தது. என் போன்ற பெண்களை தண்டிப்பதுதான் நம் சமூகம் வழங்கும் நீதி. எனவே மாமனாகிய கயவனைத் தண்டித்தேன்.

.......

● சம்மாந்துறை மஷூறா

# காணி நிலம் வேண்டும்



**கா**ணிகள் பற்றிய உரிமை சம்பந்தமாக நடாத்திய கருத்தரங்குகளில் பொது மக்களிடம் இருந்து எழுப்பப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் பின்வரும் முக்கிய பிரச்சனைகளுக்கு விடைகாணும் முகமாக எழுப்பப்பட்ட பொதுப் பிரச்சனைகள் பற்றிய வினாக்களுக்கு விடை தரப்படுகிறது.

**வினா:-**

உயர் பாதுகாப்பு வலயம் தேசிய அபிவிருத்தி தேவைகளுக்கு மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த பூமி அரசாங்கத்தினால் சுவிகரிக்கப்படுதல் பற்றிய விளக்கம்.

**பதில்:-**

பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் அதி உத்தம ஜனாதிபதி யவர்கள் நாட்டின் பாதுகாப்புக் கருதி நாட்டின் எப்பிரதேசத்தையும் எல்லைகளை குறித்த அட்டவணையுடன் வர்த்தமாணி ஒன்றின் மூலம் பாதுகாப்பு வலயத்தை வெளிப்படுத்தலாம். பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாதபோது ஏற்கனவே வெளியிட்ட வர்த்த மானி அறிவித்தலை இன்னுமொரு வர்த்த மானி வெளியீடு மூலம் மீளப்பெறலாம். எமது அரசியலமைப்புச் சட்ட உறுப்புரை 15 இன் படியும் அடிப்படை உரிமைகளில் சில மட்டுப்பாடுகள் பின்வரும் விடயங்களில் காணப்படுனிறது.

**உறுப்புரை மட்டுப்பாடுகள்:-**

1. தேசிய பாதுகாப்புக்காக
2. இன சமய சுமூக வாழ்வுக்காக
3. தேசிய பொருளாதார நலன்
4. பொது மக்கள் ஒழுங்கு
5. பொது சுகாதார ஒழுங்கு
6. பாராளுமன்ற சிறப்புரிமை
7. நீதி மன்ற அவமதிப்பு

ஆகவே மேற்படி விடயங்களில் எமது அடிப்படை உரிமைகளில் வேண்டிய மட்டுப்பாடுகளை அரசாங்கம் விதிக்க முடியும். எமது அடிப்படை உரிமையின் அரசியலமைப்பில் உறுப்புரை 10 முதல் உறுப்புரை 14 வரை கூறபட்டுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 14 இன் கீழ் இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடவும், விரும்பும் இடத்தில் வசிக்கும் சுதந்திரம் வரையப்பட்டுள்ளது. ஆனால் பாதுகாப்புக் கருதி சில பிரதேசங்களில் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கே செல்லமுடியாத அளவு அவர்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளது. இன் நிலை ஒரு கையால் உரிமைகளை வழங்கிவிட்டு மறுகையால் பறிப்பது போலாகும். அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் மட்டுப்பாடான உறுப்புரை 15 பற்றி பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ் உறுப்புரை மூலம் அடிப்படை உரிமையின் பெரும் பகுதி மறுக்கப்படுவது புலப்படுவதாக உணரப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை. ஆகவே இந்த உயர் பாதுகாப்பு வலையம் என்று கூறிக் கொண்டு பொது மக்களின் வாழ்விடங்களில் அவர்கள் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படுவது அவர்களின் அடிப்படை உரிமையான உறுப்புரை 14 இல் விரும்பிய இடத்தில் வசிப்பதற்கும் தடையின்றி நடமாடுவதற்குமான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளமையாக உணரப்படுகிறது.

பொதுமக்களின் காணியை பொது மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் காரணம் இல்லாமல் நீண்டகாலத்திற்கு தடை செய்து வைத்துக் கொண்டு இருக்க முடியாது. அப்படி நீண்டகாலம் அல்லது நிரந்தரமாக வைத்திருப்பதானால் இலங்கையின் சட்ட ஏற்பாடான காணி சுவீகரிப்புச் சட்டம் இல 09 இன் 1950 இன் படியும் அதன் காலத்துக்கு காலம் வெளியிடப்பட்ட திருத்தங்கள், ஒழுங்கு விதிகளின் படி சுவீகரிப்பு மேற் கொள்ளப்படல் வேண்டும். அப்படி சுவீகரிப்பு நடவடிக்கை முறை செய்யப்படாமல் இருப்பது, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டப் பிரிவு 5 இன் கீழ் காணிகளை தடைசெய்து வைத்திருப்பது, சுவீகரிப்பு சட்டத்தை பின் பற்றாது வலுவிகழ்தலாகும். (Altra Virus) இது ஒரு அடிப்படை உரிமை மீறலாகும். இதற்காக உயர் நீதிமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சு, சட்டமா அதிபர் ஆகியோருக்கு எதிராக உறுப்புரை 17இன் கீழ் வழக்குத் தொடர்ந்து உறுப்புரை 126 இன் மூலம் நீதிமன்றம் இவ்விரு நிறுவனங்களையும் கேள்விக்குட்படுத்தமுடியும்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (UDHR) 1948 டிசம்பர் மாதம் 10ம் திகதி ஐக்கியநாடுகள் பொதுச்சபை மனித உரிமை பற்றிய உலக பிரகடனத்தை ஏற்றுச் சாற்றியது. இப்பிரகடனம் கூட ஒரு கட்டுப்படுத்தும் ஆவணமாக அமைய வில்லை. இதன் உறுப்புரை 17 பின்வருமாறு கூறுகிறது.

**உறுப்புரை 17:-**

01. தனியாகவும் வேறொருவருடன் கூட்டாகவும் ஆதனத்தை சொந்த மாக வைத்திருப்பதற்கு ஒவ்வொரு வருக்கும் உரிமையுண்டு.

02. எவரினதும் ஆதனம் ஒருதலைப் பட்ச மனப்போக்கான வகையில் பறிக்கப்படுதலாகாது.

ஆகவே ஒருவருடைய ஆதனத்தை ஒருதலைப்பட்ச மனப்போக்கில் பறித்தலா காது. இப்பிரகடனம் 1948இல் பிரகடனப் படுத்தப்பட்டாலும் 1966ஆம் ஆண்டிலே மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இலங்கை இச்சமவாயங்களை ஏற்றுக் கொண்ட நாடாக வந்தது. 1997 ஆம் ஆண்டில் தனி மனிதர்கள் ஐ.நா மனித உரிமைகள் குழுவுக்கு முறைப்பாடு செய்யும் உரிமை வழங்கப்பட்டது. உள்ளூரில் நிவாரணம் கோரித் திருப்தியுறாத பட்சத்தில் இதற்கு மேன்முறையீடு செய்யமுடியும். ஆகவே இன்றுள்ள நிலைமைப்படி அடிப்படை உரிமை மீறல் வழக்கில் உயர் நீதிமன்றத் தீர்ப்புடன் திருப்தியடையாதவிடத்து இச் சபைக்கு மேன் முறையீடு செய்ய முடியும். ஆகவே பாதுகாப்பு அடிப்படையில் பொது மக்கள் காணிகளை அர்த்தமின்றி ஆயுதப் படைகள் வைத்திருப்பதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நிவாரணம் கிடைக்காத பட்சத்தில் ஐ.நா. மனித உரிமைகள் குழு வுக்கு மேன்முறையீடு செய்ய முடியும்.

**பொதுவாக இலங்கையில்**
(Right of life property of Happiness)

1. உயிர் வாழ்வதற்கான உரிமைகள்.
2. சொத்துக்களை சேகரித்து வைப்பதற் கான உரிமை.
3. அந்தரங்கத்தை பேணுவதற்கான உரிமை.
4. நாட்டை விட்டு வெளியேறும் சுதந்திரம்.


அரசியலமைப்பில் இல்லாத மனித உரிமைகளாகும்.

இலங்கையில் அரசியலமைப்பின் உறுப்புரை 33 இன் கீழ் நிலங்கள் தொடர் பான நிர்வாகம் மற்றும் விநியோகிக்கும் முழுமையான அதிகாரம் இலங்கை ஜனாதி பதிக்கே உண்டு. 13வது அரசியலமைப்பின் கீழ் திருத்தம் இதில் கொண்டுவரப்பட்டு மாகாண சபை அதிகாரமாக காணிகளைக் கையாளும் அதிகாரம் ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டது. ஆனால் மாகாண சபைகள் பல முயற்சிகளை மேற்கொண்டும் ஜனாதிபதி செயலகம் இடமளிக்கவில்லை. இதற்கும் நிவாரணம் கிடைக்காத போது. சர்வதேச மனித உரிமைகள் சமவாயத்தின் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

■ க.குருநாதன்
ஓய்வு பெற்ற உதவி காணி ஆணையாளர்

# பொலிஸ் மகளிர், சிறுவர் பிரிவின் படிமுறைகள்

ஏ.சி.ஏ. அஸீஸ், மனித உரிமைகள் ஆணைக்குழு



**இலங்கை பொலிஸ் சேவை**
(Police Service in Sri Lanka)

இலங்கைப் பொலிஸின் பணிக் கூற்றானது, எவருக்கும் கேடு விளைவிக்காமல், எல்லோருக்கும் சமமாக, நாட்டின் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடிப்பதற்கும், செயற் படுத்துவதற்கும், பொதுசன ஒழுங்கைப் பேணி பாதுகாப்பதற்கும், குற்றத்தையும். பயங்கரவாதத்தையும் தடுப்பதற்கும் திட சங்கர்ப்பம் பூண்டுள்ளதுடன், திடநம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

**பொலிஸ் மகளிர், சிறுவர் பிரிவு**
(Police Women and Children Desk)

பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் நீதியை உறுதிசெய்யவும், பெண்களுக் கெதிரான வன்முறைகள் மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்களை விசாரணை செய்யவும் பெண்கள் சிறுவர் பிரிவு நாடெங்கிலுமுள்ள பொலிஸ் நிலையங்களில் நிறுவப்பட்டன. இவர்களுக்கான அதிகாரங்களில் குற்றத் தால் பாதிக்கப்பட்ட பெண்களினதும், சிறுவர் களினதும் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளலும், அவர்களுக்கு வழிகாட்டலும், பாதுகாப்பு வழங்கலும் உள்ளடங்குகின்றன.

**குடும்பங்களில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைக்கான காரணிகள்**

இலங்கையில் குடும்பப் பிரச்சினையானது நான்கு அடிப்படைக் காரணிகளைக் கொண்டு நடைபெறுகிறது.

1. கணவன், மனைவி இருவருக்கி டையே பொருளாதார சமமின்மை
2. தீர்மானம் எடுக்கின்ற அதிகாரத்தை ஆண்கள் கொண்டிருத்தல்
3. உடலியல் வன்முறைகள்
4. சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள் ளப்பட்ட ஆண் ஆதிக்க செயற்பாடுகள்

**பாதிக்கப்பட்ட பெண்ணின் முறைப்பாட்டினை பொலிசில் பதிவு செய்தல்**

- விசாரணைக்கு வருகின்றவர் தேவை யான தகவலை வழங்கக் கூடியவர் என்பதை பொலிஸ் உத்தியோகத்தர் உறுதியாக அறிந்திருக்க வேண்டும்
- உரியவரை விசாரணை செய்வதற்கு அல்லது வாக்குமூலம் ஒன்றினைப் பதிவு செய்வதற்கு முன்னர் உறுதிப் பிரமானம் அல்லது சத்தியப் பிரமானம் செய்யும்படி அவரிடம் பொலிஸ் அதிகாரி கேட்கக்கூடாது.

- வாய்மூலம் விசாரணை செய்கின்ற போது வாய் மூலம் பதிலளிக்கும்படி அவரிடம் கேட்கலாம். வாய்மூலம் கொடுக்கப்படும் பதில்கள் பொலிஸ் அலுவலரால் பதிவு செய்யப்படலாம்.

- சகல விடயங்களும் தகவல் கொடுக் கப்படுபவரால் அளிக்கப்படும் பதில் களும் அதே முறையில் கேள்வி, பதிலாக பதிவு செய்யப்பட வேண்டும்.

- முறைப்பாட்டினை அல்லது வாக்கு மூலத்தினை வாசித்துப் பார்க்க அனுமதிக்க வேண்டும் அல்லது வாசித்துக் காட்டப்பட வேண்டும்.

- வாக்குமூலம் வாசித்துக் காட்டப்பட்ட பின்னர் தொடர்ந்து எவற்றையேனும் சேர்த்துக் கொள்ளும்படி அல்லது நீக்கும்படி கோரப்படும்பட்சத்தில் அதற்கு ஆட்சேபனையின்றி இடம ளிக்க வேண்டும்.

- முறைப்பாட்டினை அல்லது வாக்கு மூலத்தினை பதிவுசெய்யப்பட்ட பின்னர் பதிவில் எவையேனும் சேர்ப்புக்கள் அல்லது நீக்கல்கள் செய்யப்பட்டால் அவ்விடங்களில் சிறு ஒப்பமிடப்பட வேண்டும்.

- முழுதாக எழுதப்பட்டு முடிவில் முறைப்பாட்டாளர் கையொப்பம் இடும்போது, மேலதிகமாக எதுவும் சேர்க்கப்படுவதற்கு இடமளிக்காமல் இடப்பட வேண்டும்

- வாக்குமூலத்தின் முடிவில் பதிவு செய்த பொலிஸ் அலுவலர் தகவல் கொடுப்பவரின் பெயர் மற்றும் பதிவு செய்த பொலிஸ் அலுவலரின் பெயர் எழுதப்பட்டு "ஆகிய நான் பதிவு செய்துள்ளதுடன், இவ்விபரங்களை நான் அறிந்த வகையில் உண்மை யாகவும், திருத்தமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளனவென்றும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்" என எழுதி அப்பொலிஸ் அலுவலர் கீழ்க் கையொப்பமிட வேண்டும்.

**பொலிஸ் புலன் விசாரணைகள்**
(Investigation of Police)

- ஒரு சம்பவத்தின் முதலாவது தகவலை ஆவணப்படுத்தும் போது ஒரு சட்ட மீறலொன்றை செய்ததாக அறியப்பட் டால் அல்லது அத்தகைய மீறலொன் றினைச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வாய் மூலமாக, தொலைபேசி மூலமாக, அல்லது எழுத்தில் அறிவித்தால் அத்தகைய ஒரு வாக்குமூலத்தை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஆவணப்படுத்த வேண்டியது அவரது கடற்பாடாகும்.

- வாக்கு மூலத்தினை பதிவு செய்கின்ற பொலிஸ் அதிகாரி அது முறைப் பாட்டாளர் பேசுகின்ற மொழியில் எழுதப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

- பதிவு செய்யப்பட்ட பின் அதனை முறைப்பாட்டாளருக்கு வாசித்துக் காட்ட வேண்டும். முறைப்பாட்டாள ருக்கு வாசிக்கத் தெரியவில்லை யாயின் வாசிக்கத் தெரிந்த ஒருவரை வரவழைத்து வாசித்துக்காட்ட வேண்டும்.

- முறைப்பாட்டாளர் பேசுகின்ற மொழி பொலிஸ் அதிகாரிக்கு விளங்கா

விட்டால் அவர் முறைப்பாட்டை அவர் பேசுகின்ற மொழியில் எழுதித் தரும்படி பணிக்கலாம்.

- முறைப்பாட்டாளர் கையொப்பமிட முடியாதவராயின் அவரது இடது கைப் பெருவிரல் அடையாளம் வைக்கப்பட வேண்டும்.

- முறைப்பாட்டாளர் எழுத்திலான ஒரு வாக்குமூலத்தை கொடுக்க முடியாதிருந்தால் மூன்று தேசிய மொழிகளில் எந்தவொரு மொழியிலும் பொலிசார் ஆவணப்படுத்துவதற்கு பொலிஸ் அதிகாரிக்கு உரிமையுண்டு. இதனை ஆவணப்படுத்துவதற்கு முன்னர் தகவல் கொடுப்போருக்கு வாசித்துக் காட்ட வேண்டும். மொழி பெயர்க்கப்பட்டால் அவரிடமிருந்து சான்றுப்படுத்துகின்ற கூற்றொன்று பெறப்படல் வேண்டும்.

- முறைப்பாட்டாளர் பேசுகின்ற மொழியில் அவ்வாக்கு மூலம் இருக்குமாயின் அதனை உடனடியாக பொலிஸ் நிலையத்திலுள்ள பதிவுப் புத்தகத்தில் ஒட்டி ஆவணப்படுத்த வேண்டும்.

- முதலாவது தகவலைக் கொடுக்கின்ற ஆள், ஒன்றில் பாதிக்கபட்டவராக, ஒரு சாட்சியாக, அல்லது குற்றம் ஒன்றில் தொடர்புடைய ஒருவராக இருக்கலாம்.

- எனினும் குற்றமானது சிறு குற்றமாகவிருந்தாலும். கடுங் குற்றமாகவிருந்தாலும் பொலிசுக்கு வழங்கப்பட்ட முதலாவது தகவல் பொலிஸ் புலன் விசாரணைகளைப் பொருத்தமட்டில் மிகவும் முக்கியமானது.

- பொலிஸ் அதிகாரியால் முதலாவது தகவல் (First Information Record) பொலிஸ் நிலையத்திற்கு வெளியே பதிவுசெய்யப்பட்டு "பதிவுப் புத்தகத்தில்' ஆவணப்படுத்தப்படாமல் இருந்தால், தாமதமின்றி அதனை குறித்த புத்தகத்தில் பதிய வேண்டும்

**பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவித்தலும், அவரின் கடமைகளும்**

✓ குடும்ப வன்முறையோ அல்லது பெண்களுக்கெதிராக புரியப்படுகின்ற எந்தச் செயலாக இருந்தாலும் முதலாவது தகவலைப் பெறுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர் அதற்குப் பொறுப்பான அதிகாரி இல்லாத விடத்து அவ்விடயம் இயன்றவரை பொறுப்பதிகாரியின் (OIC) கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

✓ ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி கடுங்குற்றம் ஒன்று புரியப்பட்டதாக அல்லது அறிவிக்கப்பட்டிருப்பின், கூறப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரால் அதைப் பற்றிய ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்ட உடன் மேலதிகாரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

✓ இதனை பொலிஸ் பொறுப்பதிகாரி கூறப்பட்ட இடத்திற்கு புலன் விசாரணைகளுக்காக நேரடியாகச் சென்று பார்வையிடவும், குற்றமிழைத்தவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும் வேண்டும். மேலும் புலன் விசாரணையின் போது சந்தேக நபர்களைக் கைது செய்ய வேண்டுமாயின் பொறுப்பதிகாரி தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு பொறுப்பை ஒப்படைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

**குறிப்பிட்ட சம்பவம் பற்றித் தகவல் தெரிந்தவரென நம்பப்படும் ஒருவரைப் பொலிஸ் கட்டளையிட்டு அழைப்பதற்கான உரிமை**

- ✓ புலன் விசாரணை தொடர்பில் குற்றவியல் சட்டத்தின் 11ம் உறுப்புரையின்படி, அவரின் பொலிஸ் பிரிவில் அல்லது அருகிலுள்ள பிரிவில் வாழ்கின்றவரும், ஒரு குறிப்பிட்ட சம்பவம் பற்றித் தெரிந்தவரென சந்தேகிப்படுபவருமான எவரேனும் ஆளுக்கு பொலிஸ் நிலையத்திற்கு அறிக்கை தரும்படி அவரைக் கோருகின்ற எழுத்திலான அழைப்பாணை ஒன்று அனுப்பப்படலாம்.
- ✓ அவ்வாறு வரவழைக்கப்படும் ஆள் பொலிஸ் நிலையத்தில் அறிக்கையிட வேண்டும். அத்தகைய நபர் கூறப்பட்ட நேரத்தில் பொலிஸ் நிலையத்திற்கு வரத் தவறினால் அல்லது அழைப்பாணையை புறக்கணித்தால் அரசின் கட்டளையொன்றை மீறியமைக்காக தண்டனை சட்டக் கோவையின் 172ம் பிரிவின் கீழ் அவர் தண்டிக்கப்படலாம் என்பதுடன் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடரப்படலாம்.

**பொலிஸ் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெண்**

ஒரு பெண்ணை சந்தேகத்தின் பேரில் சோதனையிடுவதற்கு வேறு ஒரு நம்பிக்கையான ஒரு பெண்ணை அல்லது ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரை அவரது மானத்திற்கு பங்கம் ஏற்படாத வண்ணம் அவரை பரிசோதனை செய்யவேணடும். பொலிஸ் பாதுகாப்பில் அவரைத் தடுத்து வைக்கும் போது, பொலிஸ் பெண் மேற்பார்வையாளர் அவருடன் இருக்க வேண்டும்.

**குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரின் உரிமைகள்**


- ✓ குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் நீதிமன்றில் ஒரு சட்டத்தரணி ஒருவரை பிரதிநிதித்துவம் செய்வதற்கு உரித்துடையவராவார்.
- ✓ விசாரணையின் போது தன்னை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் எவரையாவது சாட்சியாக அழைக்கலாம்
- ✓ குற்றம் சாட்டப்பட்டவர் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்ட முறையில் குற்றவாளியென்று நீதிமன்றத்தை திருப்திப்படுத்த வேண்டியது வழக்காளி தரப்பின் பொறுப்பாகும்.
- ✓ குற்றம் சாட்டப்பட்டவர் விசாரணையின் போது சத்தியப்பிரமானம் செய்து சாட்சியமளிப்பதற்கு அல்லது மௌனமாயிருப்பதற்கு அல்லது சாட்சிக் கூண்டிலிருந்து சத்தியப் பிரமாணம் செய்யாது கூற்றொன்றைச் செய்வதற்கு உரிமையுடையவர்.

**குற்றவியல் வழக்குகளில் மேன்முறையீடுகள்**

- ✓ நீதிமன்ற இருபக்க விசாரணைகளின் பின் குற்றத் தீர்ப்பொன்றினைப் பெற்றுக் கொண்ட நபர் ஒருவர் அத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்
- ✓ நீதிவான் நீதிமன்றத்திலிருந்து 28 நாட்களுக்கு முன்னரும், மேல் நீதிமன்றத்திலிருந்து 14 நாட்களுக்கு முன்னரும் மேன்முறையீடு செய்யப்பட வேண்டும்.
- ✓ மேன்முறையீட்டு நீதிமன்றம் குற்றத் தீர்ப்பை இரத்துச் செய்தால் அது எதிராளியை உடனடியாக விடுதலை செய்யலாம்.
- ✓ அல்லது எதிராளியை மீள் விசாரணைக்குட்படுத்தலாம்.
- ✓ அல்லது வழங்கப்பட்ட தீர்ப்பினை அதிகரிக்கலாம்.

◘

# சோர்தலின் இடையிலோர் ஆண்மக் குரல்



**மெ**ன்மை என்பது
மேனியின் வசீகரம் என்பதாய்க்
கருத் தோற்றம்......

பால்நிலைச் சமத்துவம் பற்றி
பகுத்து, வகுத்து, பலபட விரித்துப்
பயிற்சி வழங்கி, களைத்து, வீடு
திரும்புகையில் -
குவிந்து கிடக்கின்றன,
கணவனின் வியர்வை படிந்த
ஆடைகள்......!

பெண்மையை உருவகித்து,
உயிர்க் கருவூலத்தின்
உற்பத்திச் சக்தியாய், விக்கிரக
மயப்படுத்தி
உபாளிக்கும் சமூகம்,
அவள் சிரிப்பதற்கும், சினுங்குவதற்கும்,
நடப்பதற்கும், படுப்பதற்கும்,
பாய்வதற்கும்
என்று
வரையறைகள் வகுத்தபடி....

சட்டகங்களின் 'சற்சதுரத்துள்'
அடங்காமற் போனால்
'சதிர்க்காரி'......
சாகஸக்காரி'......
'தேவடியாள்'......
'திமிர் வாதம் பிடித்த பிசாசு'......

புருசனுக்கு இன்னும்
பூஜை புரியச் சொல்லும், தமிழர்
பண்பாடு,
'படுக்கையறை விழுப்புண்' பற்றி
சௌகர்யமாய் அலட்சியம் செய்யும்!
பெண் -
பிரபஞ்ச எல்லைகளை உடைத்து (த்)'
தனக்கான வெளியைப் போராடிச்
சிருஷ்டித்த பின்பும் -
அவள் மீதான வன்முறைகளும்,
வளையங்களும்,
வசவுகளும், வதைகளும்
வால் வெள்ளியாய் நீட்சி கொள்ளும்!

பெண் -
தனக்கான மொழி தேடி,
தனக்கான வாழ்வியலில் -
தனக்கேயான ஒளிப்புள்ளி
தியானித்து, ஆழமாய், திடமாய்,
மண்ணில் உறுதியாய் ஒடுக்கும்
அதே தருணம் -
'சீதையா,
கண்ணகியா – கற்பில் சிறந்தவள்'
லியோனியின் பட்டிமண்டப
இறுவட்டுகளில்
மூழ்கிக் கிடக்கும் கணவனும், சகோதரமும்,
மற்றுள உறவினரும்......
சலித்துப்போன –
நொடித்துப் போன
மனதைத் தூசு தட்டி,
உற்சாகமாய் எனக்குள்
உரத்துக் கூவுவேன்.

"பெண்ணின் பிறிதோர் உலகை
நோக்கி,
மண்ணில் ஓர் மௌனப்புரட்சி
மையங் கொள்கிறது!"

• முறையூர் ச. சசீதரன்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# முகத்தில் விழும் பந்துகள்

எஸ். நிலுஜா.

( எடுத்துரைஞன் மேடையின் வலது பக்க படிக்கட்டினால் ஏறி மேடையின் மத்திய பகுதிக்கு வருகின்றான். நிதானமாக சபையை நோட்டம் விடுகிறான். பேசத் தொடங்குகிறான். தொடங்கும் போது மெல்ல மெல்ல மண்டப விளக்குகள் அணைகின்றன. மேடையின் நடுப் பகுதியில் நின்று உரையாற்றுகின்றான்.)

**எடுத்துரைஞன்** - அமைதி அமைதி எல்லோரும் அமைதியாக இருங்கள். உங்களுடன் சில வார்த்தைகள் இன்றைய பெண்களின் சமூக நிலை குறித்து. (மேடையின் இடம் வலமாக அசைந்து கவிதை நடையில்)

அழகின் வடிவம் பெண்
கருவறையின் ஊற்றுப் பெண்
தாய்மைக்கு பொக்கிசம் பெண்
சாதனையாளர்களின் பிறப்பிடம் பெண்
தர்மத்தின் தேவதை பெண்
மென்மையின் தென்றல் வன்மையின் சூறாவெளி பெண்
மொழிக்கு, நாடுகளுக்கு கவி நாயகி பெண்
மொத்தத்தில் சர்வமும் சக்தியும் பெண் ......

(உயர்ந்த தொனியுடன்) இது உண்மையா (வலது மூலையில் நின்று) இது உண்மையா (இடது மூலையில் நின்று) வாருங்கள் பார்ப்போம் (நடுவில் இருந்து) திரை மெல்ல விலகுகின்றது.

## காட்சி 01

(காலைப் பொழுதை வெளிப்படுத்தும் வகையில் இசை ஒலிக்கப்படுகிறது. ஒரு தாய் இரண்டு மகள்மார் மூவரும் இசைக்குப் பொருத்தமான வகையில் காலைநேர வேலைகளில் ஈடுபடுகின்றார்கள்.

(ஊர்மத்தியில் நிகழ்கின்றது.) இசை மெல்ல மெல்ல குறைந்து செல்கின்றது.)

(ஒருசிலர் ஒரு கூடையை கையில் பிடித்துக் கொண்டு வலையைத் தோளில் போட்டுக்கொண்டும் மேடையின் இடதுபக்க மூலை வழியாக ஏறி வருகின்றார்கள்.)

**தம்பிமுத்து** : (வலையை கீழே வைத்துக் கொண்டு கூடையை நிலத்தில் கொட்டி) தவமணி இந்தா மீன் இருக்கு. இதுல நமக்கு கறிக்கு எடுத்திட்டு தா விற்கப்போற நேரம் சரி.

**தவமணி** : (மீனத் தொட்டு) இந்த இரண்டு சீலாவையும் எடுக்கிறன்.

**தம்பிமுத்து** : (கையைத் தட்டிவிட்டு) சீ அத வை. இந்தக் கீரி சூடையில எடு.

**கமலா** : (தேனீர்க்கோப்பையை தகப்பனிடம் கொடுத்து விட்டு) இந்த மீன் (தொட்டுக்காட்டி) சமைப்பம் அம்மா.

**தம்பிமுத்து** : சீச்சி அத எடுக்காத தவமணி. அத வை. இத எடு. கீரி சூடைய வாங்குற சனம் குறைவு.

**கமலா** : என்னப்பா ஒரே இந்த மீன்தானே சமைக்கிற. இண்டைக்கு இத சமைப்பமே அப்பா.

**தவமணி** : இஞ்சாருங்க இவள் விமலாவும் இந்த மீன் சாப்பிட மாட்டாள். நேற்று வேணாம் எண்டு பப்படப் பொரியலும் வெங்காயமும் வச்சுத்தான் சோறு சாப்பிட்டவள்.

**தம்பிமுத்து** : (உயர்ந்த தொனியில்) அப்ப என்னத்த விற்கிற. இந்த மீனை வித்தா கொஞ்சம் கூட காசு எடுக்கலாம்.

**தவமணி** : (தேனீர் கப்பை வாங்கி) சரி சரி விடுங்க. (தயக்கத்துடன்) என்ன விமலா சாப்பிடமாட்டாள்.

**தம்பிமுத்து** : அப்ப விமலாவுக்கு பொரிச்சுக்குடன்.

(பெட்டியை சக்கிலில் கட்டிக் கொண்டு மேடையைச் சுற்றி மீன் எனக் கூறி மேடையில் இருந்து மறைகின்றான்.) (சிறிது நேரம் மேடை வெறுமையாக மௌனமா இருக்கிறது. மேடையின் இடது மூலையில் இருந்து முதியவர் ஒருவர் வருகிறார்.)

**முதியவர்** : (வந்து) புள்ள புள்ள புள்ள....(அவசரத் தொனியில்)

**தவமணி** : என்ன ஐயா!

**முதியவர்** : புள்ளோய் அந்த கோயில் சந்தியில சக்கிலில வந்த ஒரு ஆளுல பஸ் மோதி அவசரமா அம்புலன்சில கொண்டுபோறாங்க. கொண்டு போற ஆளப்பாத்தா எனக்கு உண்ட புருசன் மாதிரி தெருஞ்சுது. எதுக்கும் போய்க் கொஞ்சம் பாரு.

(அதிர்சியுடன் கையில் இருந்த பாத்திரத்தை போட்டு விட்டு ஓடுகிறாள்)

**முதியவர்** : (மேடையின் வலது மூலையில் இருந்து இடது மூலைக்கு நகர்ந்தவாறு தனக்குள்) கடவுளே அந்த உயிருக்கு ஒரு ஆபத்தும் வந்திரக்கூடா அப்பா. நீதான் காப்பாத்தனும் (எனக் கூறி மேடையில் இருந்து கீழே இறங்குகிறார்.) (மேடை வெறுமையாக இருக்கிறது பின்மேடையில் சத்தம் கேட்கிறது) ஐயையோ என்ன விட்டுத்துப் போய்த்திங்களே. இனி எனக்கு ஆரு துணை. நான் என்ன செய்வேன் இந்த இரண்டு பிள்ளைகளையும் எப்படி கரசேர்பேன். ஏன் இப்படி ஒரு நிலமை எனக்கு ஐயோ. நான் என்ன செய்யப் போறேன்..... (சிறிது நேரத்தின் பின் மேடையின் ஒரு பக்கத்தில் இருந்து மறுபக்கமாக ஒரு கூடையுடன் நடந்து கொண்டு "மீன் மீன்....." என்று கூவி தவமணி மேடையில் சுற்றி வருகிறாள்.தூக்கி எடுத்துக்

**தவமணி** : புள்ள புள்ள மீன் வேணுமா. சீலா, கும்புளா,பார, முரல் இருக்கு வேணுமா? (மேடையின் பின் குரல் கேட்கிறது) வேணாம் அக்கா. (அடுத்த மூலைக்கு வந்து) மீன் வேணுமா தங்கச்சி. (மேடையின் பின் குரல் கேட்கிறது.) இண்டைக்கு விரதம் அக்கா மரக்கறி நாள். (அடுத்த மூலைக்குச் சென்று நிற்க ஒரு பொடியன் மேடையின் வலது மூலையால் ஏறி வருகிறான்).

**தவமணி** : தம்பி மீன் வேணுமா?

**பொடியன்** : (கூடைய எட்டி) எங்க பாப்பம் காட்டுங்க?

**தவமணி** : (கூடையை விரித்து) இந்தா பாரு தம்பி.

**பொடியன்** : நல்ல மீனா இது (ஏளனமாகச் சிரித்து)

**தவமணி** : ஓம் தம்பி இது கடற்கரையில போய் ஏலம் வச்சி எடுத்து வாறன் தம்பி. நல்ல மீன் பாரு. (மீன் பூவினை உயர்த்திக் காட்டுகிறாள்.)

**பொடியன்** : (கேலிச்சிரிப்புடன்) நல்ல மீனா (மேடையை நோக்கி) டேய் இஞ்ச பாருடா நல்ல மீனாண்டா. (கேலி செய்கிறான்)

**தவமணி** : (கோபத்துடன்) மீன் வேணும் எண்டா எடு தேவயில்லண்டா போ. (கூடையைத் தூக்கி எடுக்கிறாள் விறு விறு என்று நடக்கிறாள்.)

**பொடியன்** : (தனக்குள்) பாரன் ஆள விற்கிறது மீன் அதுக்குள்ள திமிரப்பாரன். (இதே வேளை முதியவர் மேடையின் வலது பக்கமாக ஏறி வெற்றிலையை மடித்து வாயில் போட்டவாறு)

**முதியவர்** : என்னடா மனே தனியக் கதச்சிக்கொண்டு நிக்கிறா?

**பொடியன்** : (சிரிப்புடன்) இஞ்ச பாருங்களன் ஐயா! மீன் விக்கிற ஆக்கள.

**முதியவர்** : (வெற்றிலையைத் துப்பியவாறு) என்னடா தம்பி நீ சொல்லுறா. அது ரெண்டு குமர்ப் பிள்ளைகள வச்சிற்று சும்மா இருக்க ஏலுமா? எப்படியாவது கரை சேர்க்கத் தானே வேணும். (பெருமூச்சோடு) மீன் விற்று ஒரு புள்ளயை வாத்தியாக்கிப் போட்டாள். மற்றப்பிள்ள என்ன செய்யிதோ தெரியா?

**பொடியன்** : அப்ப இவட புருசன் என்ன செய்யிறார்?

**முதியவர்** : அவனும் மீன் விற்றுதான் குடும்பத்தைப் பாத்து வந்தான். பிறகு அவண்ட காலம் (கையை மேலே காட்டி) முடிஞ்சி

## காட்சி 02

(திரை விலகுகிறது மேடையின் முன் பகுதியில் சட்டிகள் அடிக்கி வைக்கப்பட்டுள்ளது. கமலா ஒரு சட்டியை செய்து கொண்டு இருக்கிறாள். அவளுடன் அவளது பிள்ளைகள் இருவர் சட்டி செய்து கொண்டு இருக்கிறார்கள். மேடையின் வலது பக்கமாக ஏறியவாறு தள்ளாட்டத்துடன் சண்முகம் ஏறிவர சுதனும், சுமனும் இரண்டு மூண்டு சட்டியை அடுக்கி

கொண்டு மேடையின் ஒரு பகுதியில் கொண்டு மறைத்து வைக்கிறார்கள். ஏறி வந்து சண்முகம் சட்டிகளை காலால் உடைக்கிறான். கமலா வந்து தடுக்கிறாள்.)

**சண்முகம்** : டியேய் என்னடி எனக்கு மேலேயே நீ கை வைக்கிறியாடி. ஆ தள்ளுறா.

**கமலா** : பின்ன என்ன நான் எவ்வளவு கஸ்டப்பட்டு செய்து வைக்கிறன் நீ வந்து உடைச்சித் தள்ளுறா.

**சண்முகம்** : உடைப்பண்டி உண்ட முகறையையும் உடைப்பன்.

**கமலா** : ஏன் தான் இப்படி இருக்கியோ தெரியா.(தலையில் அடித்துக் கொண்டு)

(சுதனும் சுமனும் சட்டிகளை எடுத்துக் கொண்டு மேடையின் பின் மெதுவாக நகர்ந்து செல்கின்றனர்.)

**சண்முகம்** : டேய் நில்லுங்கடா (உயர்ந்த தொனியில் )

**சுதன் சுமன்** : (திடுக்கிட்டு) என்னப்பா

**சண்முகம்** : எங்கடா ரெண்டுபேரும் பதுங்கிறிங்க? (அரட்டுகிறான்)

**சுதன்** : (சட்டியை மறைத்தவாறு) இல்லப்பா ஒண்டும் இல்ல.

**சுமன்** : (நடுங்கிக் கொண்டு நடுக்கத்துடன்) ஒண்டும் இல்லப்பா

**சண்முகம்** : (கிட்டநெருங்கி) சட்டிய ஒழிக்கத்தானேடா இரண்டுபேரும் பதுங்குறிங்க ஆ

**சுதன் சுமன்** : இல்லப்பா இல்ல

(சட்டியைப் பறித்து ஒரு போடு போடுகிறான். இருவரும் நடுங்கிப் போய் நிக்கின்றனர்.)

**கமலா** : (தலையில் அடித்துக் கொண்டு) நாசமாப் போனவனே நான்மட்டும் செய்து வந்தது காணாது எண்டு ரெண்டு பிள்ளைகளையும் ஸ்கூலுக்கு அனுப்பாம பிள்ளைகளையும் செய்ய வச்சி அதுகளப் படிக்கவும் விடாமக் கூட காசு சம்பாதிக்கலாம் எண்டு கஸ்ரப்பட்டு செய்து வச்சிருந்தத உடைச்சிப் போட்டியே?

**சண்முகம்** : உடைப்பண்டி உடைப்பன். இப்ப எனக்கு 500ரூபா காசு தா?

**கமலா** : காசுக்குப் போறான் இப்ப என்னட்ட காசு இல்ல.

**சண்முகம்** : பொய் சொல்லாதடி. காலையில 50 சட்டி வித்ததாகக் கேள்விப் பட்டண்டி தா காசு கெதியா.

**கமலா** : என்னட்ட காசு இல்ல

**சண்முகம்** : (சட்டியை உடைத்து) காசு தா இல்லாட்டி எல்லாத்தையும் உடைப்பன் இப்ப.

**கமலா** : நீ சூதாடவும், குடிக்கவும், வெறிக்கவும் காசு கேக்கிறா? நானும் எண்ட பிள்ளைகளும் கஷ்டப்பட்டு சேர்க்கிற காச நீ அழிக்கிறியே. (அழுதுகொண்டு) நீ உழைச்சுத்தந்தாலும் பறவால்ல. எண்ட காசையும் நீ அழிக்கிறியே.

**சண்முகம்** : கூடக்கதைக்காம ஒப்பாரி வைக்காம 500 ரூபாக் காசத் தா

**கமலா** : தரமாட்டன் போ.

**சுதன் சுமன்** : அம்மா குடுங்கம்மா அடிப்பாரு அம்மா குடுங்க.(தாய் அருகில் சென்று பின் எட்டிப்பார்த்து) சட்டியெல்லாம் உடைக்கப் போறாரம்மா. (பயத்துடன்) சட்டிய உடைச்சிப் போட்டாரு அம்மா

**கமலா** : (ஆவேசத்தோடு சாசைத்தூக்கி எறிந்து) இந்தா கொண்டு போ நீ எல்லாம் மனிசனா? என்ட அம்மா என்ன படிக்க வைக்கல்ல. படிச்சா இப்படி கஷ்டப்படுவனா. அந்த மனிசியும் பாவம். அப்பா செத்த பிறகு மீன் வித்து எங்கள வளத்து விட்டாவு. இப்ப அவையும் போய் சேர்ந்து விட்டா. (புலம்புகிறாள்)

**சண்முகம்** : (காசை எடுத்து விரித்துப் பார்த்து சிரித்துக் கொண்டு) இண்டைக்கு நம்மட பாடு பறவால்ல.(மேடையில் இருந்து செல்கிறான்) (பிள்ளைகளை அழைத்துக் கொண்டு மேடையின் மத்தியில் அழுது கொண்டு இருக்கிறாள். திரை மெல்ல மெல்ல மூடப்படுகிறது.

## காட்சி 03

(திரை விலகுகிறது. மேடையின் ஒரு பகுதியில் கதிரையில் இருந்து சந்திரன் புகைத்துக் கொண்டு இருக்கிறான். விமலா மேடையின் வலது பக்கமாக ஏறி வருகின்றாள்) (விமலா வந்து வீட்டின் முன் கதவை திறந்து விடுகிறாள்.)

**சந்திரன்** : (எட்டிப்பார்த்து கோபத்துடன்) நில் எங்க போய்க் கிடந்து வாறா ஸகூள் உனக்கு மட்டும் அஞ்சரைக்கு முடியுதா?

**விமலா** : (முற்றத்தில் செருப்பினை களற்றியவாறு) இல்லங்க ஸபோட்மீற்றுக்கு பிள்ளைகளுக்கு றில் பிறக்டிஸ் இருந்தது. முடிச்சிட்டு வாறன்.

**சந்திரன்** : (எழுந்தவாறு) றில் பிறக்டிஸ் முடிச்சித்து வாறியா இல்லாட்டி..........

**விமலா** : (ஆவேசத்தோடு) ஓம் நம்பல்லாட்டி றமணிச் ரீச்சரிட்ட கேளுங்க.

**சந்திரன்** : நான் கேட்டா அவ என்னப்பத்தி என்ன நினைப்பா

**விமலா** : (தனக்குள்) வெளியாக்கள் நல்லவன் என்டு நினைக்கனும் எண்ட வறட்டுக் கௌரவம் வேற உண்ட புத்தியப் பத்தி எனக்குத்தானே தெரியும்.

**சந்திரன்** : நான் ஒருக்கா வெளிய பொயித்து வாறன்.(ஆயத்தம் ஆகிறான்)

**விமலா** : எங்க போப்பிறீங்க

**சந்திரன்** : (வலக்கையை ஓங்கி) உனக்குச் சொல்லி இருக்கன் போற நேரம் என்னட்ட எங்க , ஏது, எப்படி, ஏன் என்று கேட்கக் கூடா எண்டு இனிக் கேட்டா கொல்லுவன் உன்ன. (மேடையில் இருந்து செல்லுகிறான் அவள் அசையாமல் நிக்கிறாள். மேடையில் பின் குரல் கேட்கிறது. கேள்வி கேட்பது அவள் மட்டுமா?) (மேடைக்கு சந்திரன் வருகிறான்.)

**சந்திரன்** : (மேலிருந்து கீழாக அவளை நோக்கி) என்னடி சில மாதிரி நிற்கிறா. கெதியா றூமுக்குள்ள வா.

**விமலா** : (பயத்துடன்) எனக்குக் கொஞ்சம் ஸ்கூள் வேலை இருக்கு (நடந்து கொண்டே) நாளைக்குக் கட்டாயம் கொடுக்கணும்.

**சந்திரன்** : (பின் தலையைப் பிடித்து இழுத்து வந்து) ஸ்கூள் வேலையா உனக்கு (கட்டிலில் தள்ளுகிறான் அவள் கட்டிலில் விழுகின்றாள்) நீ ஸ்கூள் போறன் எண்டு சொல்லி காலையில் ஏழு மணிக்குப் போய் ஐந்து மணிக்கு வாறா. கேட்டா றில் பிறக்டிஸ், கூப்பிட்டா ஸ்கூள் (பல்லைக் கடித்துக் கொண்டு அறைகிறான்.)

**விமலா** : (சத்தம் போடுகிறாள்) என்ன விடுங்க அடிக்காதிங்க.

**சந்திரன்** : (வாயை பொத்திப் பிடித்து) என்னடி சத்தம் போடுறா. சத்தம் போட்டியெண்டா ஸ்கூள் போகமாட்டா நீ. (அடிக்கிறான்.)

**விமலா** : ஐயோ அடிக்காதிங்க................
(மேடையின் இடதுபக்கமாக பிள்ளைகள் மூவரும் வருகின்றார்கள்.)

**பிள்ளைகள்** : ஐயோ அப்பா, அம்மாவை விடுங்க அம்மாவுக்கு அடிக்காதீங்க அப்பா. (பிள்ளைகளை சந்திரன் தள்ளி விடுகிறான். துரத்தி அடிக்கப் போகிறான். ஒரு பிள்ளை காலில் விழுகிறது. காலால் மிதிக்கிறான் உதைக்கிறான்.

**விமலா** : ஏன் எங்களுக்கு அநியாயம் செய்யிறா. (அவனைப் பிடித்து தள்ளி விடுகிறாள்)

(சந்திரன் மேடையிலிருந்து கீழே விழுகிறான். பிள்ளைகள் சூழ நிற்கும் விமலாவை என்றுமில்லாத அதிர்ச்சியுடன் பார்க்கின்றான் சந்திரன்.)

**<u>முற்றும்</u>**



# பெட்டகத்தின் கதை



சுருட்ட சுருட்ட சுருட்டவும் முடியவில்லை
மடித்துச் சுற்றி அசவில் போடவும்
முடியாத எங்கள் ஊரின் கதைகள்
நீண்டு கொண்டே சென்றது
அதற்கும் பத்து வயதிருக்கும்
என்ற நினைப்பு எனக்கு.
அந்த வயதிலிருந்தே எனக்கு
நல்ல ஞாபகம் எல்லாக் கதைகளும்.

காலங்கள் வளர்ந்தது.
கதைகளும் வளர்ந்தது

பின்பு,
காலுடன் போவதாய்ச்
சொன்ன
காட்டு வெள்ளங்கள்
தலைகளையும் கொண்டு
சென்றதாய்த்தான்
எல்லாக் கதைகளும் ஆகின.

எங்கிருந்தோ உருவாகி
பாய்ந்த அந்த
காட்டு வெள்ளத்தில்
அடித்துச் செல்லப்பட்டது
எங்களூர் மனல்கள்.

பின்பு
துடைபட்டுக் கிடக்கும்
எங்கள் ஊரின் கதைகள்
பலகாலம்

அள்ளுண்ட வெள்ளத்தில்
திரும்பாத உறவுகளை
சாமி கும்பிடப் போனதாக
அம்மா, அப்போ கூறும் கதைகள்.
(இன்னும் அவர்கள் திரும்பவேயில்லை
என்பது
பிறகு போய்ச் சேர்ந்த அம்மாவுக்குத்
தெரியாது)

என்றாலும்
பலகார மழைகளும்
எங்களூரில் பெய்துள்ளன.
அந்த
பலகார மழைகளில்
பசியாறிய சந்தோசக்
கதைகள் என்னவோ
நினைவுளில்
சரியான குறைவு.

சென்ற இடமெல்லாம்
இழுபட்டே வந்தன..........
எல்லாக் கதைகளும்

தான் போக வழியில்லை
தவில் போல
மாராப்பு
எத்தனை நாளைக்குத்தான் இழுத்துத்
திரிவது.......
கதைகள் என்றாலும்
கல்லு மாதிரி இவைகள்.

தூக்கிப்போட ஆறுதலாய் இருக்க
ஏனம் தேவை என்ற வேளை
தவிச்ச வாய்க்குத் தண்ணியாய்
கிடச்ச பெட்டகம்
வாழ்வின் ஓட்டத்தில்
ஒருநாள் வந்தது.

அள்ளிப் போட்டு
பூட்டாமல் விட்டுள்ளோம்
விரும்பியபோது
இறந்த காலத்திற்குள்ளும்
வாழலாம் என்பதுடன்

போயிருக்க
எல்லாருக்கும் பொருந்தும்
வாழ்வின் கதைகள் ~இவைகள்
என்பதாலும்.

■விஜயலட்சுமி சேகர்




அன்புடன் சகோதரிக்கு,

வணக்கம் - ஓர் இதழாசிரியையாக, ஆசிரியையின் 'இதயம்' பேசுகின்ற பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தாங்கள் சுட்டிக்காட்டியிருப்பது போல, காற்றிலே நம்பிக்கை விதைகளை மட்டுமே தூவக் கூடிய கால கட்டம் இது.

'பெண்ணின் தொடர்ச்சியான வருகை என்பது சவால்களுடனும், சாதனைகளும் தொடர்புறுத்தப்படாமல், சில குறிப்பிட்ட கருத்தியல்கள்,'அரசியல் வழிமுறைகள்' ஊடாக, அல்ல 'தனிநபர் காழ்ப்புணர்ச்சிகள் பிற்போக்குத்தனமான, அபத்தமான தூற்றுதல்கள், சிந்தனைப் பொறிகளோடு மாத்திரம் 'பெண்ணை' பெண்ணின் பேசும் பொருள்களை இணைத்துப் பார்க்கும்' நிலைமைகளும் இன்றைக்கு மேற்கிளம்பி வருகின்றன.

'வேலியோரத்து ஓணான்களின் விசாரணைக்கெல்லாம் நின்று, நிதானித்துப் பதில் பகல முற்பட்டால், எமது இலக்கின் எல்லைப் புள்ளியைத் தொடுதலில் வேண்டாத தாமதங்கள் ஏற்படலாம். ஆயின் எம்மைச் சூழ எம்மைப் பற்றி நிகழும் உராய்வு களையும்' நாம் கருத்தில் எடுத்தாக வேண்டியுள்ளது.

'பெண்' தொகுதி:16/ இல:01 (2011) இதழ் என் கரம் கிடைத்தது. நிதானமாக ஆசுவாசமாக வாசித்து முடித்தபோது எனக்குள் இருக்கும் விரிந்து, அடர்ந்து, வியாப்பித்துக் கிடக்கும் 'சிந்தனாவனத்தினுள்' கனல் மூட்டும் தீக்கங்குகளைப் 'பெண்' தன் மடியேந்திக் கிடக்கிற யதார்த்தம் புலனாயிற்று.

"காற்றிலும், நீரிலும்...... எம்மைக் காவு கொள்ளக் களைகளின் விதைகள் காத்துக் கிடக்கின்றன......" என்று எச்சரிக்கும் இதழாசிரியை அந்த விஷப்பூண்டு விதைகளை வெளிச்சமிட்டு, அவற்றை அழித் தொழிப்பதற்கான காரியக் கிரம உபாயங்களையும் சுட்டியிருக்கலாம்.

வாசுகி குணரெத்தினத்தின் 'விலங்கு என்னும் விலங்கு' எமது நீர்த்துப்போன சமூகக் கட்டமைப்பினுள், சமூகத்தின் பொதுப்புத்தியினுள் இன்னும் பெண்ணின் பருவமடைதல் தொடர்பில் நிலவும் பத்தாம் பசலித்தனத்தைச் சற்று வித்தியாசமான முறையில் "மொழிதலில்" எழுத்தோவியமாக்கியுள்ளார். எனக்கு உடனடியாகவே "அம்மா ஒரு கொலை செய்தாள்" சிறுகதையும், திருக்கோவில் கவியுவனின் ஒரு கதையும், "Purification" (தூய்மையாக்கல்) என்னும் ஆங்கிலச் சிறுகதை ஒன்றும் ஞாபகத்திற்கு வந்தன. நல்ல படைப்புக்களே அதனோடு தொடர்புடைய இதர நல்ல சிருஷ்டிப்புகளை

ஞாபகமூட்டும் என்ற வகையில் "பெண்"கருத்தியல் சார் வளர்ச்சியோடு, எழுத்தாழும் பெண்களுக்குச் சிறந்த "பயில் களமாகவும்" விளங்கியுள்ளமை புலனாகிறது.

"பெண்களை வலுவூட்டலும் சிறு முதலீட்டு வேலைத்திட்டங்களும் பெறுபேறுகளை அதிகரிக்கச் செய்வதற்கான தந்திரோபாயங்களும்" என்னும் கட்டுரை, பெண்களின் பொருளாதார வெளி தொடர்பிலான கவனிக்கப்படாத பக்கங்களைக் காட்டுகிறது. பெண்களின் தொழில் முயற்சியாண்மை, பால்நிலைப் பாரபட்ச உலகில் சவால்களும், வாய்ப்புகளும்...... மட்டக்களப்பு மாவட்டத்தை மையப்படுத்திய ஆய்வு என்னும் நூலாக்க முயற்சியில் ஈடுபட்டுள்ள எனக்கு அக்கட்டுரை மிகுந்த பயன் நிறைந்ததாகத் தோன்றுகிறது. பெண்களின் கண்ணுக்குப் புலனாகாத உழைப்புப் பற்றி 'பெண்' முன்னரும் கூட பேசியிருக்கின்றமை நினைவிற் கொள்ளத்தக்கது.

"காவலம்மா" நாடக அளிக்கை உண்மையில் ஒரு வித்தியாசமான கலையாக்க முயற்சி. அவ்வளிக்கையை நேரிலும் அவதானித்தவன் ( மட்/ செல்வநாயகம் மண்டபம்; 29.04.2011) என்கிற வகையில், அதனை மிகவும் அவதானத்துடனும், முழுமையாகவும் உள்வாங்க முடிந்தது. அரசு மங்கை போன்ற தமிழகத்தின் புலமையாளர் தம் இணைவும், இசையும், பங்கு பற்றுதலும் மகிழ்ச்சிக்குரியது. இது பற்றிய க.மோகனதாசனின் அவதானக் குறிப்பும் பயனுடையது. பால்நிலைக்கும் படைப்பாக்கத்திற்குமான ஆழ்நிலைப்பட்ட தொடர்புகள் பற்றி, இன்னும் அவர் கவனம் செலுத்தி இருக்கலாம்.

மின்மினியின் கதைகளும், செய்திகளும் சுவாரஸ்யத்தோடு மடிந்து விடாமல், தீவிரமான சமூக அக்கறையை உந்திக் கிளப்பினாற் சரி. நளிராவின் 'வாகனம் செலுத்தக் கற்கிறேன்' எனும் ஆக்கம் பல பெண்களிற்குள்ளும் நெளிந்து, அரிந்து கொண்டிருக்கும் தயக்கம், ஐயத்திற்கும் ஒரு முற்றுப்புள்ளி இடுவதாய் உள்ளது. இது தொடர்பில் - சுவாரஸ்யமான – எனது அநுபவம் ஒன்றையும் பகிரலாம் என்று நினைக்கிறேன். போர் அனர்த்தம், ஆபத்தை எதிர்கொள்ளத் தயங்கும் மனம், மிக இறுக்கமான, பாதுகாப்புணர்வுடனான பெற்றோரியம் (Peronting), காரணமாக, நானும் மிக அண்மைக் காலம் வரையிலும் வாகனம் செலுத்தத் தெரியாதவனாகவே இருந்தேன். இதனால் சொந்த வாழ்விலும், தொழில் வாழ்விலும் எதிர் கொண்ட தடைகள், தாமதங்கள், மனநெருக்கீடுகள் பல.

வேடிக்கை யாதெனில், சக மனித உரிமைக்காய் மிகத் தீவிரமாய்க் குரல் கொடுக்கும் பெண்கள் கூட "மட்டம் தட்டிய" சம்பவங்களும் உள. "பொம்பிளைகளே பைசிக்கிள், மோட்டார் சைக்கிள், கார் என்று தூள் கிளப்பும் போது......" அதைத் தொடங்கியே என் மீது வீசப்பட்ட விமர்சனங்கள் 'அண்மை'(Masculinity) 'பெண்மை' (Feminity) பற்றிய சமூகக் கருத்தியல்களின் போலித் தன்மையைப் பகுப்பாய்வு செய்ய நன்கு உதவின.

**ஆண், பெண் என்பதைத் தாண்டி மனிசர் யாவருக்கும் சில திறன்கள் அவசியம். அதனைப் பயிலவும், திறனீட்டவும் மேலாதிக்கமான அல்லது நியாயமற்ற**

**எந்தவொரு நியமமும், விழுமியமும் தடையாக அமையக் கூடாது என்பதே எனது அபிப்பிராயம். வாகனம் செலுத்துதல், பாய்தல், நீந்துதல், ஓடுதல், தற்காப்புக்கலை யாவும் "பால்", பால்நிலையைத் தாண்டி யாவர்க்குமே அத்தியாவசியம்.**

( இப்போது நான் நன்கு மோட்டார் வாகனம் செலுத்த தேர்ச்சி பெற்றமையால் என் ஆய்வுப் பயணம் சௌகர்யப்பட்டமையும். பயணங்களை நேசிக்கும் கவியுள்ளங்கள் வெறி கொள்ளும்படி, மட்டக்களப்பின் இயற்கைச் சௌந்தர்யம் மிளிரும் திசை தோறும் பயணிப்பதும் வேறு கதை!)

மொழிவரதன், யாழினி, கலைமகள் போன்றோரின் கவிதைகள் பெண் உணர்வைப் பேசுகின்றன. மறுபடியும் பெண் பற்றிய கவிதா நிகழ்வுகளை – ஆண், பெண் கவிஞர்களை ஒருங்கிணைத்து – ஓடத்தின் புதிய உத்வேகம் ஏற்படலாம்.

பெண் சஞ்சிகையை "தமது மார்க்கத்திற்கு முரணாக இருப்பதாலும்", "கணவன், மனைவி உறவைச் சீரழிப்பதனாலும்" அனுப்பி வைக்க வேண்டாம் எனக் கோரும் கடிதம், எமக்கு மறுபடியும் ஓர் இருண்ட யுகப் போர்வை கவியும் சோர்வைத் தந்தாலும், நம்பிக்கை வற்றி விடவில்லை. இம் மடல் படித்ததும் "மதக் கோட்பாடுகளும், பெண்களும்" பற்றிப் பல சிந்தனைகள் மனக்குளத்தில் அலையெறிந்தன. விரைவில் இவ் எண்ணக்கருவினை அடியொற்றி ஓர் ஆழமான கட்டுரை வரைய முற்படுகிறேன்.

'பெண்' இன்னும் செழுமையுற, ஷேமமுற வாழ்த்துக்கள்.

"பெண் அடிமை தீரும் வரை - ஈண்டு
மண் விடுதலை வெறுங்கனவே"

இவன்,
தோழமையுடனும்,
இலக்கிய நேசிப்புடனும்,
சந்திரசேகரன். சசீதரன்.
கிழக்குப் பல்கலைக் கழகம்,

**பெண் ஆசிரியருக்கு,**


அன்பின் வாழ்த்துக்கள் பல.

பெண் சஞ்சிகையானது காலத்திற்கு ஏற்றவகையில் பல கட்டுரைகளையும் தகவல்களையும் வெளியிட்டு வருவது பாராட்டுக்குரியது வாழ்த்துக்கள்

சூரியா வெளியீடுகள் அனைத்தும் அருமையானவை. "புரையை அகற்றாமல் புற்றுநோய்க்கு வைத்தியமா? அபிவிருத்தியில் பெண்கள் கருத்தாக்கத்தின் கோட்பாட்டுப் பின்புலங்கள்" என்ற நூலை அனுப்பி வைக்கவும்.



இப்படிக்கு,
வாசகன் **விக்டர்.**



அன்பான ஆசிரியர் அவர்கட்கு,

தொடர்ந்து "பெண்" வாசித்துக்கொண்டிருக்கிறேன்.
"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"
என்னும் முகப்பு வசனமே பெண்ணுக்கு சிறப்பு.
இன்று இந்த நேரத்தில் எனது மனதில்பட்ட ஒரு சிந்தனையை உங்கள் முன் முன் வைக்க எண்ணினேன்.

இன்றைய பல பிரழ்வான நடவடிக்கைகளுக்கு காரணங்கள் அருகிக் கொண்டே போகலாம். ஒன்றோடொன்று தொடர்புபட்டு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றது. நான் சிந்தித்த கோணமும் சரியாக இருக்கும் என நினைக்கிறேன்.

இன்று பாடசாலைகளில் உளவளத் துறைக்குப் பொறுப்பாக ஆசிரியர்களை நியமித்துள்ளார்கள். ஆனால் 80% மான தெரிவுகளும் பொருத்தமற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. அவர்கள் அத்துறைக்குப் பொருத்தப்பாடு உடையவர்களாக தென்படவில்லை.

15, 16 வயது பெண் பிள்ளைகளின் பின்னால் ஆண்பிள்ளைகள் சுற்றுவதை ஆண் பிள்ளைக்கு உளவளம் சரியில்லை என்று கூறுவது பொருத்தப்பாடு உடையதாக தெரியவில்லை. இவ்வாறு சரியான ஆய்வு இல்லாமல் தனக்கு எல்லா பிரச்சனைகளும் தெரியும் எனக் காட்டிக் கொள்பவர்களாக இவ்வாசிரியர்கள் ஈடுபடுவது மனவருத்தத்திற்குரியது.

எனது கருத்துப்படி ஒரு உளவளத்துறை ஆசிரியர் என்பவர் திருமண வாழ்வை திருப்திகரமாக வாழ்பவராகவும் குறைந்தது 10 வருட ஆசிரிய சேவையை முடித்திருக்க வேண்டியவராகவும் உள்ளார்.

பாடசாலைகள் தான் எந்தவொரு நல்ல நிலைகளுக்கும் காரணம். இந்த ஆசிரியர்கள் புரியும் செயல்கள் அதனை மாற்றியமைக்கிறது. உண்மைத் தன்மையை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையுள்ள,
**து. பொன்னரசி**

# வருடாந்த சந்தா – பெண்

ஐரோப்பா, வட அமெரிக்கா,
அவுஸ்திரேலியா
**US$ - 8**
இந்தியா
ரூபா 500.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 200........................**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்.**

பெயர் : ..................................................................
விலாசம் : ..................................................................
திகதி : ..................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல. 55, லேடி மனிங் டிறைவ்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**
No:55, Lady Manning Drive,
Batticaloa,
Sri Lanka.

THE WOMAN - A Journal Published by
Suriya women's Development centre,
No.3, Lady Manning Drive
Batticaloa, Sri Lanka.



ISSN : 1391-6122